# THE CHILD MARRI[AGE] RESTRAINT AC[T]

## (SARDA ACT)

*with introduction, critical commentary, and note[s]*

பால விவாஹங்களைத் தடுக்கும் சட்டம்.

(சாரதா ஆக்ட்.)

முகவுரை, குறிப்பு முதலியவைகளுடன் இயற்றப்பட்டது.

EDITED AND PUBLISHED BY

M. S. PARTHASARATHI IYENGAR B.A., B.L.,

Pleader, (Editor The Tamil All India Law Journal)

TIRUVALLUR.

AT

The Tamil All India Law Journal Office,

Tiruvallur, Chingleput Dt.

PRINTED AT THE

ANANDA PRINTING WORKS

TIRUVALLUR.

1929.

PRICE AS. 6. POSTAGE EXTRA

*REGISTERED COPY RIGHT.*

# THE CHILD MARRIAGE RESTRAINT ACT.

## (SARDA ACT)

*with introduction, critical commentary, and notes*

## பால விவாஹங்களைத் தடுக்கும் சட்டம்.

(சாரதா ஆக்ட்.)

முகவுரை, குறிப்பு முதலியவைகளுடன் இயற்றப்பட்டது.


EDITED AND PUBLISHED BY

M. S. PARTHASARATHI IYENGAR B.A., B.L.,

Pleader, (Editor The Tamil All India Law Journal)

TIRUVALLUR.



AT

The Tamil All India Law Journal Office,

Tiruvallur, Chingleput Dt.

PRINTED AT THE

ANANDA PRINTING WORKS

TIRUVALLUR.

1929.

PRICE AS. 6. POSTAGE EXTRA.



*REGISTERED COPY RIGHT.*

3

# விஷய சூசிகை.


முகவுரை. i முதல் viii

பிரிவுகள். பக்கம்.

1. சுருக்கப் பெயரும் வியாபிக்கும் பிரதேசமும் அமுலுக்கு வரும் காலமும். ... 1

2. அர்த்தங்கள். ... ... 1

3. 18–வயதுக்குமேல் 21-வயதுக்குட்பட்டிருக்கும் ஒரு நபர் பாலவிவாகம் செய்துகொண்டால் அதற்கு தண்டனை. ... 3

4. 21-வயதுக்கு மேற்பட்ட ஒரு புருஷன் பாலவிவாஹம் செய்து கொண்டால் அதற்கு தண்டனை. ... ... 4

5. ஒரு பால விவாகத்தை முறைப்படி நடத்திவைத்தால் அதற்கு தண்டனை. ... 5

6. ஒரு பால விவாகத்தில் சம்பந்தப்பட்ட பெற்றோர் அல்லது கார்டியனுக்குத் தண்டனை. .... 7

7. மூன்றுவது பிரிவின் கீழுள்ள குற்றங்களுக்குக் காவல்தண்டனை கூடாது. ... 9

8. இந்த சட்டத்தின்கீழ் அதிகார வரம்பு. .... 10

9. குற்றங்களை பிடிக்கும்விதம். ... 12

10. இந்த ஆக்டின்படிக்கான குற்ற விஷயமாய் பிரதம விசாரணை செய்வது. ... 13

11. பிராது கொடுப்பவரிடமிருந்து ஜாமீன் வாங்க அதிகாரம். .... .... 15

# பால விவாஹங்களைத் தடுக்கும் சட்டம்.

## (சாரதா ஆக்ட்.)

### இந்தியா கவர்மெண்டு 1929-ம் வருஷத்திய 19-வது சட்டம்.

### பால விவாஹங்கள் நடந்தேறி பூர்த்தியாவதை தடுப்பதற்கான ஒரு சட்டம்.

---

## முகவுரை.

---

இந்தியா சட்டசபையில் பாலர்களுக்குள் விவாஹம் நடந்தேறுவதை தடுப்பதற்காக ராவ்பஹதூர் ஹரிவிலாஸ் சாரதா என்பவர் ஒரு மசோதாவைக் கொண்டுவந்து அம்மசோதா இந்தியா சட்டசபையாரால் பரிசோதிக்கப்பட்டு கடைசியாக ஒரு "ஆக்டு" (சட்டம்) ஆக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு சட்டமும் இந்தியா கவர்னர் ஜனரலால் அது அமுலுக்கு வரலாமென்று அனுமதி கொடுக்கப்பட்டால்தான் அமுலுக்கு வரமுடியுமாதலால் இச்சட்டமும் 1—10—29ல் இந்தியா கவர்னர் ஜெனரலால் அமுலுக்கு வரலாமென்று சம்மதிக்கப்பட்டது. 1—4—1930 முதல் இச்சட்டம் அமுலுக்கு வரும்.

இச்சட்ட விஷயமாக, நமது நாடெங்கும் பலர் பலவிதத்திலும் பல மாதிரியாக தமது அபிப்பிராயங்களைத் தெரிவித்துவந்து, பெரிய கூட்டங்களிலும் கூடித் தமது அபிப்பிராயத்தைத் தெரிவித்திருக்கின்றனர். இச்சட்டம், சட்ட சபையில் நடந்தேறுவதற்கு முன், பல எதிர்வாதக் கூட்டங்களும் பல ஆமோதனைக் கூட்டங்களும் நடந்து பலவிதமாக நமது நாட்டினர் பேத அபிப்பிராயங்களை தெரிவித்து வந்தனர். இச்சட்டம் அமுலுக்கு வருவதாக ஸ்திரப்பட்ட பிறகு, தென்னிந்தியாவில் பல பிராமண பொதுக் கூட்டங்களும் சனாதன பொதுக் கூட்டங்களும், மகம்மதிய கூட்டங்களும் நடந்தேறி இச்சட்டத்தைக் கண்டித்து வருகின்றன. இந்தியாவின் சனாதன தர்மத்திற்கும் மகமதியர் மதக் கொள்கைக்கும், இந்தியர்களின் உயர்வுக்கும் இச்சட்டமானது ஒரு சீர்குலைக்கும் கோடாலியாகுமென்று பலர் எதிர்த்து வருகின்ற

னர். வடநாடுகளிலும் இம்மாதிரியான பல பொதுக்கூட்டங்களும் நமது மதக்கொள்கைக்கே இச்சட்டம் விரோதமானதென்று வற்புறுத்தத் தொடங்கியிருக்கின்றன. மேல்நாட்டு நாகரீகத்தில் பழகியிருக்கும் ஸ்திரிபுமான்கள் அனைவரும் அரசியலில் போராடுவோர்களும் இச்சட்டம் இந்தியா தேசத்திற்கே நன்மைசெய்வதாகும் என்று கூறி வருகின்றனர்.

தவிர, இச்சட்டத்தை இந்தியா சட்ட சபையார் அங்கீகாரம் செய்திருப்பதே செல்லாது என்றும் இச்சட்டம் இந்தியா கவர்மெண்டு ஆக்டு பிரகாரம் சரியாக நடந்தேறவில்லையாதலால் இதை அமுலுக்குக் கொண்டு வருவதற்கில்லையென்றும் பல நிபுணர்கள் ஆக்ஷேபித்து வருகின்றனர். ராவ் சாஹேப் ஹரிவிலாஸ் சாரதா என்பவர் முதலில் தாம் 1927 வருஷம் பிப்ரவரி மாதத்தில் கொண்டுவந்த மசோதாவானது, இந்தியா சட்ட சபையில் ஆலோசனை செய்யப்படுவதற்காக கவர்னர் ஜெனரலின் அனுமதி பெறப்பெற்று பிறகு சட்ட சபையின் அங்கத்தினரிலிருந்து பொறுக்கி யெடுக்கப்பட்ட சில அங்கினத்தின ரால் தனியாக பரிசோதனை செய்யப்படுவதற்கு அனுப்பப்பட்டு அவர்களால் கவனிக்கப்பட்டு வெளிவந்தபொழுது அடியோடே உருவு, கொள்கைகள், விதிகள், அம்சங்கள் முதலிய யாவும் மாறி, மசோதா வேறுபட்டுவிட்டது. கவர்மெண்டு உத்தியோகஸ்தரல்லாத ஒரு சட்ட சபை அங்கத்தினர் ஒரு மசோதாவை ஆலோசனைக்கு கொண்டு வர வேண்டுமென்றால், முதலில் கவர்னர்ஜெனரலுடைய அனுமதி பெற்ற பிறகு தான் அதை சபையின் ஆலோசனைக்குக் கொண்டுவரலாம். பிறகு கடைசியாக அம்மசோதா சட்டமாக வேண்டுமென்றால் இந்தியா கவர்னர் ஜெனரலுடைய அனுமதிபெற்ற பிறகு தான் அமுலுக்கு வரும். மேல்நாடுகளில் உள்ள வழக்கப் பிரகாரம் முதலில் சட்ட சபையின் ஆலோசனைக்கு விடப்பட்ட மசோதாவானது, கூடிய வரையிலும் தன் ஸ்வரூபம் கலையாமல் இருந்தால்தான் அதற்கு கொடுக்கப்பட்டிருக்கும் அனுமதி செல்லத் தகுந்ததாகும் என்று உள்ளது. இம்மசோதாவானது, முதலில் ராவ்பஹதூர் ஹரி விலாஸ் சாரதா என்பவர் கவர்னர் ஜெனரலுடைய அனுமதி பெறும் காலத்தில் பெற்றிருந்த ரூபம் அடியோடே மாறப்பட்டு ஒரு சிவில் சட்டமாக இருந்ததுபோக, ஒரு ஆக்டாக நடந்தேறி வந்தபோது ஒரு கிரிமினல் சட்டமாக முடிந்துவிட்டிருக்கிறது. ஒருவேளை

கவர்னர் ஜெனரலிடம் அனுமதி கேட்கப்படும் காலத்தில், இம்மசோதா ஒரு கிரிமினல் சட்டமாக நுழைக்கப்பட்டிருப்பின், கவர்னர் ஜெனரல் அடியோடே அனுமதி கொடுக்காமல் இருந்திருக்கலாமென அபிப்பிராயப்பட்டிருக்கின்றனர். ஆகையால் இச்சட்டமானது, அமுலுக்கு வருவதற்கே சட்டத்தினுல் யோக்கியதைக் குறைவு அடைந்திருப்பதாக பலர் அபிப்பிராயப்பட்டிருக்கின்றனர்.

இதுவரையிலும், நான், இச்சட்டமானது, மதக் கொள்கைகளை தாக்கி, குடும்ப ஏற்பாடுகளை கலைக்கிறதாகவும், சட்டப்பிரகாரம் அமுலுக்கு வருவதற்கான யோக்கியதைகளும் குறைவுபட்டிருப்பதாகவும் ஆகிய இவ்விரண்டு காரணங்களால் எதிர்க்கப்படுவதாக சொல்லிவந்தேன். இன்னும், இவை தவிர, மூன்ருவதாக, இச்சட்டத்திலேயே, பல கோளாறுகளும் வீண் வியாஜ்ஜியங்களுக்கு வேண்டிய ஆஸ்பதங்களும் உள்ளனவென்று தெரிவிக்க நான்முன்வந்திருக்கிறேன். அவைகள் இப்புஸ்தகத்தின் ஒவ்வொரு பிரிவின்கீழுள்ள குறிப்புகளில் விவரமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை சற்று சுருக்கமாக கவனிப்போம்.

இச்சட்டத்தின் 5-வது பிரிவில் ஒரு பாலவிவாகத்தை நடத்தும் உபாத்தியாயர்களுக்கு ஏற்படும் தொந்தரவை கவனித்து உபாத்தியாயர்கள் ஒரு விவாகத்திற்கு அடியோடே வராமலிருக்கலாம். அல்லது தமக்கு நேரும் தண்டனையைச் சுட்டிக்காட்டி, விவாகங்களில் அதிகமான தொகை பெற்றுக் கொள்ளலாம். இரண்டாவதாக ஒரு பாலவிவாகம் நடந்தபிறகு அதை நடத்தினவர்களை, அவர்கள் பேரில் பிராது செய்யப்போவதாக கண்டபேர்களும் அவர்களிடமிருந்து பயமுறுத்தி பணம் பிடுங்கிக்கொள்ளலாம். ஒரு பிராது செய்த பிறகும் பிராதி, எதிரி, இருவரும் ஒருவர்க்கொருவர் ராஜி செய்துக் கொண்டு கோர்ட்டுக்கு வராமலே இருக்கலாம். இவைகளுக் கெல்லாம் இச்சட்டமானது இடம் கொடுப்பதாகும். இப்புஸ்தகத்தில் கண்டிருக்கும் சகல அம்சங்களையும் கவனித்துப் பார்த்தால்இச்சட்டம் முற்றிலும் மாற்றப்படவேண்டும் என்று ஏற்படும்.

முதலில் ராவ் பஹதூர் ஹரி பிலாஸ் ஸாரதா அவர்கள், சட்டசபைக்கு அனுப்பின மசோதாவும் அதன் காரண நோக்கங்களும் அடியில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது.

# இந்தியா சட்டசபையில் நே. 21 of 1927-
# ஹிந்துக்களில் பாலர்கள் விவாகம் செய்து கொள்வதை ஒழுங்குபடுத்துவதற்காக ஒரு மசோதா சட்டம்.

ஹிந்துக்களில் பாலர்கள் விவாகம் செய்துகொள்வதை ஒழுங்கு படுத்துவதற்காகவும் ஒரு குறிப்பிட்ட வயதுக்குக் கீழ் உள்ள வதூவரர்களின் விவாகம் செல்லத்தக்கினதல்ல வென்று ஏற்படுத்துவது அவசியமென்று தோன்றுகிறபடியால் பின் வருமாறு சட்டம் ஏற்படுத்தப் பட்டது:—

சுருக்க பெயரும் வியாபிக்கும் விஸ்தீரணமும்.

1. (i) இந்தச் சட்டமானது 192 வருஷத்திய பால விவாக சட்டம் எனப்படும்.

(ii) இச்சட்டமானது ஷெட்யூல் ஜில்லாக்கள் உள்பட பிரிடிஷ் இந்தியாமுழுவதிலும் வியாபிக்கும்.

2. இந்த சட்டத்தில்,—

அர்த்தங்கள்.

(a) "ஹிந்து" என்னும் பதமானது ஜெயினர்கள், சிக்கியர்கள், பிரம்மோ வகுப்பினர், ஆரிய சமாஜஸ்தர்கள் இவர்களையும் குறிக்கும்.

(b) "கார்டியன்" என்பதற்கு 1890-ம் வருஷத்திய கார்டியன் அண்டு வார்ட்ஸ் ஆக்டில் "கார்டியன்" என்பதற்கு என்ன அர்த்தமோ அதே அர்த்தமாகும்.

ஒரு பெண்ணின் விவாகத்திற்குரிய வயது

3. பின் சொல்வதற்கு விரோதமாக எவ்விடத்திலாவது எம்மாதிரியான ஏற்பாடு இருக்கும் போதிலும் அதற்கு நிமித்தியமொன்றில்லாமல் பின் ஐந்தாவது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் நீக்குதலுக்கிணங்க ஒரு ஹிந்து பெண்ணானது தாம் விவாகம் செய்து கொள்ளும் தினத்தில் 12-வயதுக்குமேற்பட்டிருந்தாலொழிய அவளுக்கு நடக்கும் விவாகமானது செல்லத்தக்கினதல்ல.

ஒரு ஆண் பிள்ளையின் விவாகத்திற்குரிய வயது.

4. ஒரு ஹிந்து ஆண்பிள்ளை தாம் விவாகம் செய்துகொள்ளும் தினத்தில் 15-வயதுக்கு மேற்பட்டிருந்தாலொழிய அவனுடைய விவாகம் செல்லத் தக்கினதல்ல.

ஒரு பெண் பிள்ளையின் கார்டியன் உத்திரவு பெற்றால் அப்பெண்ணின் விவாக காலத்தில் அவள் 12 வயதுக்குட்பட்டிருந்தபோதிலும் செல்லத் தக்கினதாகும்.

5. ஒரு பெண்பிள்ளை தன் விவாக காலத்தில் 12 வயதுக்குட்பட்டிருந்தபோதிலும் அவ்விவாகத்திற்கு முன்பாக அவளுடைய கார்டியன் (அல்லது சவரணைகர்த்தா) அவ்விவாகத்தை நடத்த வேண்டியதற்காக விவாகம் நடைபெறலாமென்று எந்த ஜில்லாவில் அப்பெண் அக்காலத்தில் வசித்துக் கொண்டிருக்கிறதோ அந்த ஜில்லாவின் மாஜிஸ்ட்ரேட்டினிடமிருந்து அவ்விவாகம் நடக்கலாமென்று ஒரு லைசென்ஸ் பெறும் பட்சத்தில் அவ்விவாகம் செல்லத் தக்கினதாகும்.

ஆனால் ஒரு பெண்ணானது 11 வயதுக்கு உட்பட்டிருப்பின் அம்மாதிரியான யாதொரு லைசென்சும் கொடுபடக்கூடாது.

லைசென்ஸ் கொடுப்பது.

6. ஒரு ஜில்லா மாஜிஸ்ட்ரேட் முன்பாக ஒரு ஹிந்து பெண்ணின் கார்டியன், லைசென்ஸ் பெறுவதற்கு, அப்பெண்ணுக்கு 11-வயது முடிந்துவிட்டதென்றும், தாம் மனப் பூர்வமாக அப்பெண் தழுவும் மதத்தின்கொள்கைகள் இனி அப்பெண் விவாகமாகாமல் வைக்கப்படக் கூடாதென்று கட்டளையிடுகின்றனவென்று நம்புவதாகவும், ஒரு பிரமாண பத்திரிகை மூலமாக தெரிவித்து ஒரு மனு கொடுத்தால், அவ்விவாகம் நடப்பதற்கு அம்மாஜிஸ்டிரேட் அவசியம் லைசென்ஸ் கொடுக்க வேண்டும்.

---

## இம்மசோதாவின் நோக்கங்களும் காரண அறிக்கைகளும்.

---

1. இம் மசோதாவின் நோக்கம் இரண்டுவிதமானது. 12 வயதுக்குட்பட்ட பெண்களின் விவாகங்கள் செல்லத்தக்கினவையல்லவென்று ஏற்படுத்துவதின் முக்கிய கருத்து என்னவென்றால், அம்மாதிரியான சிறிய பெண்கள், விதவைகளாகுவதை தடுப்பதுதான். இரண்டாவது கருத்து என்னவென்றால் பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் விவாகமாவதற்குரிய குறைந்த வயதை நிர்ணயிப்பதினால் கூடிய வரையிலும் அவர்களுடைய தேக ஆரோக்கியத்திற்கும், புத்தியின் விமர்சைக்கும் குறுக்காயுள்ள தடைகளை நீக்கி அவர்கள் தேக வளர்த்தியையும், புத்தி குறைவடையாமலிருக்கவேண்டியதையும் உத்தேசித்து அதற்குத் தகுந்த ஏற்பாடுகளை செய்வதுதான்.

2. 1921-வருஷத்திய சென்ஸஸ் ரிபோர்ட்டின் பிரகாரம் அவ்வருஷத்தில், ஒரு வயதுக்குட்பட்ட ஹிந்து விதவைகள் 612. ஐந்து வயதுக்குட்பட்ட விதவைகள் 20,24. 10-வயதுக் குட்பட்ட விதவைகள் 97857. 15-வயதுக்குட்பட்ட விதவைகள் 3,32024 என்றிருக்கிறது. இந்த ஸ்திதியில் மிகவும் விசனகரமான ஒரு அம்சம் என்னவென்றால், ஹிந்து ஆசார வழக்கப்பிரகாரம் இந்த பால விதவைகள் மறு விவாகம் செய்துக் கொள்வதற்கு தடை பட்டிருக்கிறார்கள். இம்மாதிரியான ஒரு சந்தர்ப்பம் இவ் வுலகத்தில் நாகரீகமுள்ள அல்லது நாகரீகமற்ற யாதொரு தேசத்திலும் கிடையாது. வாழ்க்கை ஆசாரத்தின் கோட்பாடுகளுக்கு அடிமைப்பட்டிருக்கும் இந்த விதவைகளுக்கு சகாயமாக சட்டம் ஆதாவுக்கு வரவேண்டியது அத்தியாவசியமாகும். இந்த ஆசார வழக்கங்களானது, பண்டை காலத்தில், அவைகளுக்குயாதொருஅவசியம் அல்லதுகாரணம் இருந்திருந்தபோதிலும் இப்பொழுது அவைகள் அடியோடே செல்லத் தக்கினதல்ல. இன்னும் சொல்ல முடியாத கஷ்டத்தையும் கெடுதியையும் அவைகள் விளைவிக்கின்றன.

3. ஹிந்துக்களின் சட்டங்களை அடங்கியுள்ளதும் மிகவும் பிரமாணமானதும் புராதனமானதுமான பிராமணங்கள் என்னும் புஸ்தகத்தின் பிரகாரம் ஒரு புருஷன் விவாகம் செய்துகொள்வதற்குரிய குறைந்த வயது 24. ஒரு ஸ்திரீ விவாகம் செய்துகொள்வதற்குரிய குறைந்த வயது 16. ஆகையால் ஒரு விவாகத்தில் ஒரு பெண்ணின் சௌக்கியத்தைக்கருதி அவளுடைய வயது இன்ன வயதுக்கு குறையக்கூடாதென்று நாம் நிர்ணயிக்கவேண்டுமானால், அவள் விவாகம் செய்துகொள்வதற்குரிய குறைந்த வயது 16 என்று இச்சட்டம் நிர்மாணம் செய்யவேண்டும், ஆனால் ஹிந்துக்களில் சிலர் ஒரு பெண் பிரவடையானபிறகு விவாகமாகாமல் இருக்கக்கூடாதென்று கொள்கைகளைக்கொண்டிருக்கின்றனர். இந்த தேசத்தில் சில பெண்கள் 12 வயதிலேயே பிரவடையாவதால் இந்த மசோதாவானது ஒரு ஹிந்துப்பெண் செல்லத்தக்கினதோர் விவாகம் செய்துக்கொள்வதற்குரிய வயது 12 என்று நிச்சயித்திருக்கிறது.

4. ஆகையால் இந்த மசோதாவானது ஹிந்துக்களில் மிகவும் வைதிகமாகவும் சாஸ்திரங்களை ஆதாரமாக கொண்டிருப்பதாகவுமுள்ள

நபர்கள் ஒப்புக்கொள்ளும் வண்ணம் மதக்கொள்கைகளை தவாக்கூடாதென்கிற அவாவைகொண்டிருப்பவர்களுக்காக, ஒரு ஹிந்துப் பெண், அவள் 11-வயதுள்ளவளாயிருந்தபோதிலும், அவளுடைய விவாகத்தை நடத்துவதற்கான ஏற்பாடு இம்மசோதாவில் கண்டிருக்கிறது. எந்த ஹிந்து சாஸ்திரமும் ஒரு பெண் பிரவடையாவதற்கு முன் விவாகம் நடந்துதான் தீரவேண்டுமென்று சொல்லவில்லை. ஆகையால், நமது தேசத்தில், பெரியதோர் தொகையினர்களுக்கு மிகவும் அவசியமானதும், அவர்களில் பல கெடுதியுண்டவர்களுக்குள்ள நியாயக்குறைவை போக்குவதற்கும் அவசியமான ஜனசமூஹ திருத்தத்தின் முதல் அடியாக 11 வயதுக்குட்பட்ட பெண்களின் விவாகம் செல்லத்தக்கதல்லவென்று நிர்மாணம் செய்வதற்கு சமயம் வந்துவிட்டிருக்கிறது. அதற்கிணையாக ஜன சமூக அபிப்பிராயமும் வளர்ந்து வந்திருக்கிறது.

5. ஆண்பிள்ளைகளைச் சேர்ந்தவரைக்கும் அவர்கள் ஒரு குறிப்பிட்டவயதில் தான் விவாகம் செய்யப்படவேண்டுமென்று சாஸ்திரங்களில் யாதொரு நிர்ணயமும் கிடையாது. ஹிந்துக்களில் பலர், ஒரு ஆண்பிள்ளை விவாகம் செய்துகொள்வதற்குரிய குறைந்த வயது 18-ஆக இருக்கலாமென்று அபிப்பிராயப்பட்டிருக்கின்றனர். ஆனால் ஹிந்துக்களில் சில வகுப்பினர் அம்மாதிரி செய்யப்படும் ஒரு சட்டம், மிகவும் மிதமிஞ்சினதாகும் என்று நினைப்பதால் இம்மசோதாவானது அவர்களுடைய அபிப்பிராயத்திற்கும் இணங்கி 15-வயதுக்குட்பட்ட ஒரு ஹிந்து ஆண்பிள்ளையின் விவாகம் செல்லத்தக்கினதல்லவென்று, நிர்ணயிப்பதாக இருக்கிறது. இங்கிலாந்திலும் கூட, பால விவாகங்கள் என்பதே கிடையாதிருந்தபோதிலும் இளம்பிராயத்தில் விவாகம் நடப்பது மிகவும் அரிதாயிருந்தபோதிலும், சிறிய ஆண்பிள்ளைகளும், பெண்பிள்ளைகளும், ஒரு குறிப்பிட்ட வயதுக்குட்பட்டிருந்தால் விவாகம் செய்துகொள்ளக்கூடாதென்று சட்டம் ஏற்படுவதற்கு அவசியமாக இருந்தது.

ஹரி விலாஸ் சாரதா.

---

M S Parthasarathi Iyengar

# பால விவாஹங்களைத் தடுக்கும் சட்டம்.

MADRAS

(சாரதா ஆக்ட்.)

இந்தியா கவர்மெண்டு 1929-ம் வருஷத்திய 19-வது சட்டம்.

பால விவாஹங்கள் நடந்தேறி பூர்த்தியாவதை
தடுப்பதற்கான ஒரு சட்டம்.

பாலர்களுக்குள் விதிமுறைப்படி விவாஹங்கள் நடந்தேறி பூர்த்தியாவதை தடுப்பது அவசியமென்று ஏற்படுகிறபடியால் அடியில் கண்டவாறு சட்டம் ஏற்படுத்தப்படுகின்றது:—

சுருக்கப் பெயரும் வியாபிக்கும் பிரதேசமும அமுலுக்கு வரும் காலமும்.

**1** (1) இந்த சட்டம் "1928-ம் வருஷத்திய பால விவாஹங்களைத் தடுக்கும் சட்டம்" என்று சொல்லப்படும்.

(2) இந்த சட்டம், பிரிட்டிஷ் பெலுசிஸ்தான் ஸந்தால் பர்காணாங்கள் உள்பட பிரிட்டிஷ் இந்தியா முழுவதிலும் வியாபிக்கும்.

(3) இச்சட்டம் 1930-ம் வருஷம் ஏப்ரல் மாதம் முதல் தேதி முதல் அமுலுக்கு வரும்.

அர்த்தங்கள்.

**2.** இச்சட்டத்தில் சங்கதி அம்சங்களிலாவது அல்லது சந்தர்ப்பப் பிரயோகங்களிலாவது வேறே அர்த்தம் ஏற்படும்படி இருந்தாலொழிய,

(a) "பாலர்" என்பது 18 வயதுக்குட்பட்ட ஆண்களையும், 14-வயதுக்குட்பட்ட பெண்களையும் குறிக்கும்.

(b) "பால விவாஹம்" என்பது ஒரு விவாஹத்தில் தம்பதிகளில் எவராவது பாலராயிருந்தால் அவ்விவாஹத்தைக் குறிக்கும்.

(c) ஒரு விவாஹத்தில் "விவாஹம் செய்துகொள்பவர்" என்பது எவ்விவாஹம் முறைப்படி பூர்த்தியாக முடிகிறதோ அவ்விவாஹத்தின் தம்பதிகளில் ஒவ்வொருவரையும் குறிக்கும்.

(d) "மைனர்" என்பது 18-வயதுக்குட்பட்ட ஆண்களையும் பெண்களையும் குறிக்கும்.

## குறிப்புகள்.

இச்சட்டமானது 1—10—29ல் இந்தியா கவர்னர் ஜெனரலுடைய அனுமதி பெற்றிருந்தும் வேணுமென்றே 1—4—1930 முதற்கொண்டு தான் அமுலுக்கு வரவேண்டுமென்று ஏற்பட்டிருக்கிறது. பிரிடிஷ் இந்தியா முழுவதிலும் இச்சட்டம் வியாபிக்கிறபடியால் இச்சட்டம் பிரசுரமான தேதிமுதல் 6 மாதங்கள் வரையிலும் யாவரும் இச்சட்டத்தின் அம்சங்களைக் கண்டறியுமாறு அவகாசம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இச்சட்டத்தில் "பாலர்" என்னும் பதத்திற்கு தனிமையான ஓர் அர்த்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. தென்மொழி இலக்கியப் பிரகாரம் 16 வயதுக்குட்பட்ட ஆண்மக்களும் பெண்மக்களும் பாலர் எனப்படுவர், ஆனால் இசசட்டத்தின் பிரகாரம் "பாலர்" என்னும் பதமானது 18 வயதுக்குட்பட்ட ஆண்களையும் 14 வயதுக்குட்பட்ட பெண்களையும் குறிப்பதாயிருக்கிறது. ஆங்கில பாஷையில் உள்ள இச்சட்டத்தில் 'பாலர்" என்பதற்கு "child" என்று கூறப்பட்டுள்ளது.

இச் சட்டமானது 18 வயதுக்குட்பட்ட ஒரு ஆணும் 14 வயதுக் குட்பட்ட ஒருபெண்ணும் ஒரு விவாஹத்திற்கு ஆளாகக்கூடாதென்று கட்டளையிடுவதாயிருக்கிறது. ஆனால், ஒரு விவாஹத்தில், தம்பதிகளிருவருமே மேற்சொல்லிய வயதுகளுக்கு உட்பட்டிருந்தால்தான் அவர்களுக்குள் நடக்கும் விவாஹம் பால விவாஹம் எனப்படும் என்பது கிடையாது. அவ் விவாஹத்தில் ஆணாவது பெண்ணாவது இருவர்களில் ஒருவராவது மேற்சொல்லிய திட்டத்திற்கு குறையக்கூடாதென்பது. உதாரணமாக, 20 வயதுள்ள ஒருவன், 13 வயதுள்ள ஒரு பெண்ணை விவாஹம் செய்துகொள்வானாகில் இச் சட்டத்தின் பிரகாரம் அவன் ஒரு குற்றம் செய்தவனாகிறான். அதேமாதிரியாக, 15 வயதுள்ள ஒரு பெண் 17 வயதுள்ள ஒரு புருஷனை விவாஹம் செய்துகொண்டால் அவ்விவாஹம் ஒரு பால விவாஹமெனக் கருதப்பட்டு இச்சட்டத்தின் கீழ் ஒரு குற்றமாகும். மேற் இரண்டாவது சொல்லிய உதாரணத்தில் விவாஹம் செய்துகொண்டவர்களில் எவரையும் தண்டிப்பதற்கில்லையாகிலும் இச்சட்டத்தின் 5, 6 பிரிவுகளின் பிரகாரம் இவ்வித விவாஹத்திற்குக் காரணமாயிருந்த நபர்கள் யாவரும் தண்டிக்கப்படுவார்கள்.

இந்த சட்டத்தில் இரண்டாவது பிரிவிலாவது, அல்லது வேறே எந்தப் பிரிவிலாவது, "விவாஹம்' என்பதற்கு யாதொரு அர்த்தமும் விளக்கப்படவில்லை. இரண்டாவது பிரிவு (c) உட்பிரிவில் "முறைப்படி பூர்த்தியாகும் விவாஹம்' என்றுதான் தெரிவித்திருக்கின்றனர். ஒவ்வொரு விவாஹமும் முறைப்படி நடந்ததா அல்லவா என்பது, அந்தந்த விவாஹத்தின் செய்கை

அம்சங்களைப் பொருந்தினதாகும். இச்சட்டம் ஜாதிமதபேதமொன்றுமில்லாமல் இந்தியாவில் எல்லா ஜாதியினருக்கும் பிரயோகப்படுத்தப்படுவதால், ஒரு "முறைப்படி நடக்கும் விவாஹ"மானது அந்தந்த ஜாதியினரின் வழக்கத்தையும், ஆசாரத்தையும் பொருத்ததாகும். உதாரணமாக, மகம்மதியருக்குள் நடக்கும் "நிகா" என்பதற்கும் ஹிந்துக்களில் நடக்கும் "கன்னிகாதானம்" என்பதற்கும் பல வித்தியாசங்கள் உள. இன்னும் ஹிந்துக்கள் நடத்தும் விவாஹங்களிலேயே பல வகுப்பினருக்குள் பலவித விவாஹங்கள் உள.

ஹிந்துக்களுள் கன்னிகாதானம் என்பது, ஒரு கன்னிகையை (பிரவடையாகாததும் 7 வயது முதல் 12 வயதுக்குட்பட்டதுமான ஒரு பெண்) அக்கன்னிகையின் தகப்பனார் ஒருபிரம்மசாரிக்கு தானமாகக் கொடுப்பது என்றர்த்தமாகும். கேள்வி என்னவென்றால், இச்செய்கையே, அதாவது ஒரு கன்னிகாதானமே ஒரு விவாஹம் எனக் கருதப்படுமா என்பது.

"முறைப்படி பூர்த்தியாகும் விவாஹம்" என்பதனால், எந்த ஜாதியில் ஒரு விவாஹம் நடக்கிறதோ அந்த ஜாதியினர் எம்மாதிரி விவாஹம் நடந்தால் அது பூர்த்தியாக நடந்ததெனக் கருதுவார்களோ அவ்விவாஹத்தைக் குறிப்பதாகும். அதாவது, ஒரு குறிப்பிட்ட விவாஹம் அந்த ஜாதியினரின் சம்மதத்தினாலோ அல்லது ஏற்பாட்டினாலோ அல்லது கட்டுப்பாடுகளினாலோ ஒரு பூர்த்தியானவிவாஹமென்று அவர்களாலேயே ஒப்புக்கொள்ளப்படவேண்டும். அவ்வித ஓர் விவாஹத்தைப்பற்றிதான் இச்சட்டமானது கவனித்து வருகிறது.

18 வயதுக்குமேல் 21 வயதுக்குட்பட்டிருக்கும் ஒரு நபர் பால விவாஹம் செய்துக் கொண்டால் அதற்கு தண்டனை.

**3.** 18 வயதுக்கு மேற்பட்டும் 21-வயதுக்கு உட்பட்டுமிருக்கும் ஒரு புருஷன் பால விவாஹம் செய்துக் கொண்டால் அவன் ரூபாய் ஆயிரம்வரையிலும் விதிக்கப்படும் அபராத தண்டனைக்கு உள்ளாவான்.

## குறிப்புகள்.

இப்பிரிவில், 18 வயதுக்குமேல் 21 வயதுக்குட்பட்ட ஒரு புருஷன், "பால விவாஹம்" செய்துகொண்டால், அதாவது 14 வயதுக்குட்பட்ட ஒரு பெண்ணை விவாஹம் செய்துகொண்டால், அவன் அபராத தண்டனைக்குட்படுவதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இச்சட்டத்தின் 7-வது பிரிவின் பிரகாரம், ஒரு புருஷன் இந்தப் பிரிவின்கீழ் தண்டிக்கப்பட்டால்,

அவன், ஒருவேளை தனக்கு விதிக்கப்படும் அபராதத்தைக் கட்டத்தவறினால் அதற்குப் பதிலாக காவல் தண்டனை அதாவது சிறைவாச தண்டனை விதிப்பதற்கில்லையென்று தெளிவாக உள்ளது. இச்சட்டத்தில் மற்ற பிரிவுகளில் உள்ள தண்டனையைக் காட்டிலும் இப்பிரிவில் உள்ள தண்டனை சற்று குறைவானது. ஏனென்றால் ஒருவன் 18-வயதுக்கு மேற்பட்டிருந்தாலும் 21-வயதுக்கு உட்பட்டிருப்பின் அவன் முதிர்ந்த புத்தியையும் பகுத்தறிவையும் அதிகமாக அடைந்திராதவனா யிருக்கலாமாதலால் அவனுக்குக் கடினமான தண்டனை விதிக்கத்தகாது என அபிப்பிராயப்பட்டிருக்கின்றனர்.

கவர்மெண்டு பிரசுரத்தில் உள்ள மொழிபெயர்ப்பில் இக்குற்றமானது "தண்டனை விதிக்கப்படத்தக்கதாகும்" என்றுகண்டிருக்கிறது. இப்புஸ்தகத்திலும் "தண்டனைக்குள்ளாவான்" என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இவ்விரண்டிற்கும் அர்த்தமொன்றுதான். இவைகளுக்கு அர்த்தம் என்னவென்று ஏற்படுமென்றால், ஒரு குற்றவாளி, தாம் செய்த குற்றத்தினின்றும் தப்புவதற்கில்லையாகிலும் அவன்பேரில் அவசியமாக தண்டனை விதித்துதான் தீரவேண்டும் என்று இல்லாததுபோலிருக்கிறது. அதாவது கோர்ட்டார் அபராதமென்று ஒன்றும் விதிக்காமலும் மன்னிப்பதற்கும் இடமுண்டென ஏற்படும்.

21-வயதுக்கு மேற்பட்ட ஒரு புருஷன் பால விவாஹம் செய்துகொண்டால் அதற்கு தண்டனை.

**4.** 21-வயதுக்கு மேற்பட்ட ஒரு புருஷன் பால விவாஹம் செய்துகொண்டானேயாகில், அவன் ஒரு மாதம் வரையில் வெறுங்காவல் தண்டனைக்காவது அல்லது ரூபா 1000-வரையில் விதிக்கப்படும் அபராதத்திற்காவது அல்லது இவ்விரண்டு தண்டனைகளுக்குமாவது உள்ளாவான்.

குறிப்புகள்.

இப்பிரிவில், 21-வயதுக்கு மேற்பட்ட ஒரு புருஷன் பால விவாஹம் செய்துகொண்டால் அதற்கு ஏற்படும் தண்டனையைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. 21-வயதுக்கு மேற்பட்ட ஒருவன், சாதாரணமாக இளம்பிராயம் நீங்கினவனென்றும் உலக நடவடிக்கைகளை நன்கு அறிந்தவனென்றும் பாவிக்கப்படலாமாகையால் அவன் ஒரு பால விவாஹம் செய்துகொள்ளும்பக்ஷத்தில் தாம் செய்யும் குற்றத்தின் பூரண அம்சங்களை நன்கு தெரிந்துகொண்டே விவாஹம் செய்துகொள்கிறானாகையால் அவனுக்கு வெறுங்காவல் தண்டனையும் இடப்படலாமென்றிருக்கிறது. ஆனால் இந்தப் பிரிவின் பிரகாரம் 21-வயதுக்கு மேற்பட்ட ஒருவன் பால விவாஹம் செய்து

கொண்டால் அவனுக்கு காவல்தண்டனை அவசியமாக விதிக்க வேண்டும் என்பது கிடையாது.

ஒரு பால விவாஹத்தை முறைப்படி நடத்தி வைத்தால் அதற்கு தண்டனை.

**5.** எவனொருவன் பால விவாஹத்தை முறைப்படிசெய்தாலும், நடத்தினாலும், அல்லது நடக்கும்படி செய்தாலும், அவன், அவ்விவாஹம் பாலவிவாஹமில்லையென்று தாம் நம்புவதற்குக் காரணமிருந்ததாக ருசுசெய்தாலொழிய, ஒரு மாதம் வரையில் வெறுங்காவலுக்காவது அல்லது 1000 ரூபாய் வரையிலும் விதிக்கப்படும் அபராதத்திற்காவது அல்லது இவ்விரண்டு தண்டனைகளுக்குமாவது உள்ளாவான்.

குறிப்புகள்.

இந்தப் பிரிவில் பால விவாஹத்தை நடத்துபவருடைய செய்கை ஒரு குற்றமென கருதப்பட்டிருக்கிறது. ஒருவர், ஒரு பால விவாஹத்தை "நடத்துவ"தென்றால் அவ்விவாஹத்திற்கேற்ற முறைப்படி தகுந்த சடங்குகளைச் செய்வதாகும்.

"ஒருவன் பால விவாஹத்தைச் செய்தாலும்" என்பது, விவாஹச் சடங்குகளை நடத்தும் ஒருவரைக் குறிக்கும். ஹிந்துக்களில் விவாஹத்தை "வாத்தியார்கள்" அல்லது உபாத்தியாயர்கள் என்று சொல்லப்படும் புரோகிதர்கள் சடங்கு கர்த்தாவாகவிருந்து நடத்துவார்கள். மகம்மதியர்களில் "காஸி" என்றும், கிறிஸ்துவர்களில் "பீரீஸ்ட்" என்றும், இம்மாதிரி ஒவ்வொரு ஜாதியில் ஒவ்வொருவர் விவாஹச் சடங்குகளை நடத்தி வருவர்.

இப்பிரிவில், ஒரு பால விவாஹத்தை நடத்தின உபாத்தியாயர்கள் முதலியவர்களுக்கு அவர்கள் தாம் இச்சட்டத்தின்கீழ் ஒரு குற்றத்திற்கு ஆளாகவில்லையென்று ருசுசெய்து தப்புவதற்கு ஒரே வழிதான் இருக்கிறது. அதாவது, அவர் தாம் நடத்திய விவாகம் பால விவாஹமில்லையென்று நம்புவதற்குகாரணமிருந்ததாக ருசுசெய்ய வேண்டும். ஆனால் இம்மாதிரி ருசு செய்வதே கடினசாத்தியமென தோன்றுகிறது. முதலில் அவ்வுபாத்தியாயர் தாம் நடத்தப்போகும் விவாஹத்தில் தம்பதிகளின் வயதுகளைப் பற்றி நன்றாக விசாரணை செய்து பிறகு அவர்கள் இச்சட்டத்தில் குறிக்கப்பட்டிருக்கும் வயதுகளுக்கு மேற்பட்டிருந்ததாக தெரிந்துகொள்ள வேண்டும்.

வயதுகளைக் கண்டறிவதற்கு சாதாரணமாக மூன்று விதங்கள் உள.

(1) வைத்திய பரீக்ஷை.

(2) ரிஜிஸ்ட்ரார் ஆபீஸில் அல்லது கிராம அதிகாரிகளிடத்தில் ஒருவன் பிறந்த விஷயமாயுள்ள பதிவு.

(3) ஜாதகம்.

(1) இவைகளில், வைத்திய பரிசை தோராயமானதே யொழிய அதனால் நிச்சயமாக இன்ன வயதென்று அளவாக தெரிந்துகொள்ள முடியாது.

(2) ரிஜிஸ்தர் ஆபீஸுகளில் பதிவு அல்லது கிராம ரிஜிஸ்தர்களில் பதிவு.

இவைகளினாலும் திருப்தியானதோர் முடிவுக்குவருவது கடினமாயிருக்கும். ஒரு குழந்தை பிறந்த விஷயமாய் பதிவுசெய்வதில், தாய்தந்தையர்கள் அக்குழந்தையின் பெயரை எழுதிவைக்க முடியாது. ஏனென்றால் அச்சமயத்தில் பெயரிடுவது வழக்கமில்லை. அதன் பிரவாகங்களையாவது அதாவது அக்குழந்தைக்கு முன்பிறப்பு இத்தனையென்றாவது அல்லது அக்குழந்தை எத்தனையாவது குழந்தையென்றாவது எழுதிவைப்பது வழக்கமில்லை. ஒருவருக்கு பல குழந்தை யிருப்பின் ஒரு குழந்தை பிறந்ததைப் பற்றி எழுதிவைக்கும் பதிவினால் இன்ன குழந்தையின் பதிவுதான் என்று தீரமாக சொல்ல முடியாது.

(3) ஜாதகம்.

ஜாதகங்களைக் கொண்டு வயதை அறிவது எப்பொழுதும் நம்பத்தக்கதாயிருக்காது. ஏனெனின், ஜாதகங்களைப் பெரட்டிக் காண்பித்து விவாஹங்கள் நடந்தேறியதாக பல புகார்கள் வெளிவந்திருக்கின்றன. பொய் ஜாதகத்தினால் ஏமாந்து போய்விட்டதாக பலர் அனுதாபப்பட்டிருக்கின்றனர். தென்னிந்தியாவில், பலர் ஜாதகங்களைக்கொண்டே விவாஹ ஏற்பாடுகளை முடிவு செய்துகொண்டு வருவதால், விவாஹம் நடக்கவேண்டுமென்கிற அவாவுடன் ஜாதகங்கள் மாற்றப்பட்டு பல தடவைகளில் வெளிவந்திருக்கின்றன. இது விஷயத்தில் மிகவும் எச்சரிக்கையாகவே இருக்க வேண்டியதாயிருக்கிறது.

மேற்சொல்லிய காரணங்களால் இப்பிரிவின் பிரயோகமானது பல விதத்திலும் கொடூரமாக இருப்பதுமல்லாமல் பலவிதங்களிலும எதிர்க்கப்பட்டு தடைபடலாம். தவிரவும், இப்பிரிவு விவாஹங்களை நடத்திவைக்கும் புரோகிதர்களுக்கு பெரிய பொறுப்பை ஏற்றுவதாகும். இப்பிரிவில் குறிக்கப்பட்டிருக்கும் தண்டனைக்கு பயந்து சிற்சில இடங்களில் முக்கியமாக கிராமாந்திரங்களில் விவாஹங்களை நடத்திவைப்பதற்கு உபாத்தியாயர்களே வராமலிருக்கவும் கூடும். இதனால் முக்கியமாக ஹிந்துக்கள் வேத சாஸ்திர ஸ்மிருதிகளையும் அவைகளை யொட்டின சடங்குகளையும் முறைப்படி நடத்துவதற்கு பெரியதோர் ஹானியாகலாம்.

6. ஒரு மைனர் பால விவாஹம் செய்துகொண்டால் அந்த மைனரின் பெற்றோராகவாவது கார்டியனாகவாவது (சம்ரக்ஷகராவது) சட்டசம்மதமாகவோ சட்ட விரோதமாகவோ அந்த மைனரை தன் வசத்தில் வைத்துக்கொண்டிருக்கும் நபர், அந்த விவாஹத்தை ஆதரிப்பதற்குரிய யாதொரு காரியத்தைச் செய்தாலும், அந்த விவாஹம் முறைப்படி நடப்பதற்கு அநுமதிகொடுத்தாலும், அல்லது அந்த விவாஹத்தை முறைப்படி நடத்தவொட்டாமல் ஜாக்கிரதையின்றி தடுக்கத்தவறிப் போய்விட்டாலும், ஒரு மாதத்திற்கு மேற்படாமல் வெறுங் காவலுக்காவது அல்லது 1000 ரூபாய் வரையில் விதிக்கப்படும் அபராதத்திற்காவது அல்லது இவ்விரண்டு தண்டனைகளுக்குமாவது உட்படுவான்.

ஒரு பால விவாஹத்தில் சம்பந்தப்பட்ட பெற்றோர் அல்லது கார்டியனுக்குத் தண்டனை

ஆனால் எந்த ஸ்திரீக்கும் காவல்தண்டனை விதிக்கத்தகாது.

(2) இப்பிரிவின் பிரயோகத்திற்காக, ஒரு மைனர் பால விவாஹம் செய்துகொண்டால், அம்மைனரை தமது வசத்தில் வைத்துக் கொண்டிருக்கும் நபர் இதற்கு மாறாக ருசுசெய்தாலன்றியும், அப்படி ருசு செய்யும் வரையிலும், அவர் தம் ஜாக்கிரதைக் குறைவால் அவ்விவாஹம் நடந்தேறுவதைத் தடுக்காமல் இருந்துவிட்டதாக அனுமானம் கொள்ளப்படும்.

## குறிப்புகள்

இப்பிரிவில் ஒரு மைனர் பால விவாகம் செய்துகொள்வதில் சம்மந்தப்பட்ட நபர்களில் பெற்றோர்களையும் சவரக்ஷணை கர்த்தர்களையும் தண்டிக்கும்படியான ஏற்பாடுகள் உள்ளன.

மேற்சொல்லப்பட்ட 3, 4, 5 பிரிவுகளில் "மைனர்" களைப் பற்றி யாதொன்றும் சொல்லப்படவில்லை. "மைனர்" என்னும் பதத்திற்கு இந்த சட்டத்தின் 2-வது பிரிவின் பிரகாரம் 18 வயதுக்குட்பட்ட ஆண் அல்லது பெண் என்று அர்த்தமாகும். 3,4,5 பிரிவுகளில் சொல்லப்பட்டுள்ள குற்றங்களைவிட பெரிய குற்றங்களைப் பற்றி இப்பிரிவு கவனித்திருப்பதாக ஏற்படும். "பாலர்" என்னும் பதம் பிரயோகப்படுத்தப்படாமல் "மைனர்" என்னும் பதமானது பிரயோகப்படுத்தப்பட்டிருப்பது மிகவும் கவனிக்கத் தக்கது. அதாவது, இப்பிரிவினால் 14 வயதுக்கு மேற்பட்ட ஒரு பெண் ஒரு பால விவாகம் செய்துகொள்ளும்பக்ஷத்தில் அப்பெண்ணின் பெற்றோர்களாவது அல்லது கார்டியனாவது தண்டனைக்கு உள்ளாவார்கள்.

இப்பிரிவினால் மூன்றுவித நபர்கள் தண்டனைக்கு உள்ளாவார்கள்:—

1. பெற்றோர்.
2. கார்டியன் அல்லது சம்ரக்ஷணை கர்த்தா.
3. மேற்சொல்லப்பட்டிருக்கும் நபர்கள் இல்லாமற்போனால் ஒரு மைனரை எவ்விதத்திலாவது சட்ட சம்மதமாகவோ, சட்ட விரோதமாகவோ, தமது வசத்தில் வைத்துக்கொண்டிருக்கும் நபர்.

மேற்சொல்லிய நபர்கள் மூன்று காரணங்களைக்கொண்டு தண்டனைக்குள்ளாகின்றார்கள்:—

1. விவாகம் நடப்பதற்கு அனுகுணமாக செய்கையைச் செய்தல்.
2. விவாகம் விதிபூர்வமாக அல்லது முறைப்படி நடப்பதற்கு அனுமதி கொடுத்தல்.
3. விவாகம் விதிபூர்வமாக நடப்பதை அஜாக்கிரதையினால் தடுக்காமல் தவறிவிடுதல்.

ஒரு மைனரை "தமது வசத்தில் வைத்துக்கொண்டிருப்பவர்" என்பதன் பூரண அர்த்தம் இனி கோர்ட்டுகளின் தீர்ப்புகளினால்தான் விளங்க வேண்டும். எவ்வளவு காலம் ஒரு மைனர் ஒருவரிடத்தில் இருந்தால் அம்மைனர் அவருடைய வசத்தில் இருப்பதாக பாவிக்கப்படுவான் என்பதைப் பற்றி இப்பிரிவில் யாதொன்றும் சொல்லப்படவில்லை.

இந்தப் பிரிவின் பிரகாரம் ஒரு ஸ்திரீ தண்டனைக்கு உள்ளாகலாம். ஆனால், அவளுக்கு காவல்தண்டனை விதிப்பதற்கு அதிகாரம் கிடையாது.

இந்தப் பிரிவின் 2-வது உட்பிரிவில் பால விவாகம் செய்து கொண்ட ஒரு மைனரை தமது வசத்தில் வைத்துக்கொண்டிருப்பவர்தான் தம் அஜாக்கிரதையினால் விவாகம் நடந்தேறியது என்பது இல்லையென்றும், தம்முடைய ஜாக்கிரதைக்கும் மீறி விவாகம் நடந்ததாகவோ, அல்லது தாம் அவ்விவாக விஷயமாய் கூடியவரையிலும் அதைத் தடுக்க பிரயத்தனப்பட்டதாகவோ, இவைகளை தாமே ருசுசெய்யவேண்டுமென்றிருக்கிறது. அப்படி ருசுசெய்யும் வரையிலும் அவர் வேண்டுமென்று அப்பால விவாகத்திற்கு உடந்தையாக இருந்ததாகவே கருதப்படுவார். சாதாரணமாக இம்மாதிரி ருசு ஏற்படுத்துவது மிகவும் கடினசாத்தியமாகும். ஒருவர் தாம் குற்றவாளியல்லவென்று ருசு ஏற்படுத்தும் வரையிலும், அவர் குற்றம்செய்திருப்பதுபோல் பாவிக்கப்படுவார் என்று சட்ட அனுமானத்திற்கே விரோதமாகும்.

*மூன்றாவது பிரிவின்கீழுள்ள குற்றங்களுக்குக் காவல் தண்டனை கூடாது.*

7. 1897-ம் வருஷத்திய ஜெனரல் கிளாஸஸ் ஆக்ட் 25-வது செக்ஷனிலும், இந்தியன் பீனல்கோட் 64-வது செக்ஷனிலும் என்ன சொல்லியிருந்தபோதிலும், அதற்கு நிமித்தியமில்லாமல், இந்த ஆக்டு மூன்றாவது பிரிவின்படி ஒரு குற்றவாளியை தண்டிக்கும் கோர்ட்டுக்கு, குற்றவாளி, விதிக்கப்படும் அபராதத்தைச் செலுத்தத் தவறினால், அவன் காவல் தண்டனையை அனுபவிக்க வேண்டுமென்று உத்தரவுசெய்ய அதிகாரம் கிடையாது.

## குறிப்புகள்.

இச்சட்டத்தின் மூன்றாவது பிரிவில் 18-வயதுக்கு மேற்பட்டு 21-வயதுக்கு உட்பட்டிருக்கும் ஒருநபர் பாலவிவாகம்செய்து கொண்டால் அவனுக்குவிதிக்கப்படும் தண்டனையைப்பற்றி கூறப்பட்டிருக்கிறது. சாதாரண சந்தர்ப்பங்களில், ஜெனரல் கிளாஸஸ் ஆக்ட்டு 25-வது பிரிவின் பிரகாரம், ஒவ்வொரு சட்டத்திலும், அதன்கீழ் ஏற்படும்குற்றங்கள் விஷயமாய் பராதம் விதிக்கப்பட்டால், அவ்வபராதம் கொடுபடாதபட்சத்தில் அதற்கு பதிலாக எதிரி காவல் தண்டனைக்கு உள்ளாக வேண்டுமென்று ஒரு உத்தரவு செய்யப்படலாம். அதேமாதிரி இந்தியன் பீனல்கோட் 64-வது பிரிவின் பிரகாரம் ஒரு எதிரிக்கு அபராத தண்டனை விதிக்கப்பட்டால், விதிக்கப்பட்ட அபராதம் செலுத்தப்படாவிடில் அபராதம் விதிக்கும்போதே கோர்ட்டார் எதிரி அபராதத்தைச் செலுத்தாவிடில் ஒரு குறித்த காலம் காவல் தண்டனைக்கு உள்ளாக வேண்டுமென உத்தரவு செய்யலாமென்றிருக்கிறது.

இந்த பிரிவானது, இந்தியன் பீனல் கோடில் 64-வது பிரிவும், ஜெனரல் கிளாஸஸ் ஆக்ட்டு 25-வது பிரிவும் இச்சட்டத்தில் பிரயோகப்படுத்தப்படக் கூடாதென்றும், கோர்ட்டார் ஒரு எதிரியை இச்சட்டத்தின் 3-வது பிரிவின்கீழ் தண்டிக்கும்பொழுது, அபராதத்தை மாத்திரம் விதிக்கலாமேயொழிய எதிரி அதைச் செலுத்தாவிடில் அவன் காவல்தண்டனையடையும்படி உத்தரவிடக் கூடாதென்று தெளிவாகக் கூறுகிறது. அதாவது கோர்ட்டார் விதிக்கப்படும் அபராதம் கட்டப்படாவிடில் அதை வசூல் செய்வதற்குரிய நடவடிக்கைகளை மாத்திரம்தான் எடுத்துக்கொள்ளலாம் என்பதாகும்.

இந்த பிரிவானது கிரிமினல் சட்ட ரீதிக்கே மாறாக செய்யப்பட்டுள்ளது. இச் சட்டமானது, இந்தியா சட்ட சபையில் நடந்தேறுவதற்குமுன் இந்தியா முழுவதும் பல கண்டனக் கூட்டங்களில் மசோதா எதிர்க்கப்பட்டு வந்ததால் மசோதாவை திருத்திவந்த செலக்ட் கமிட்டி

அங்கத்தினர் சற்று எச்சரிக்கையாகவே இப்பிரிவை சேர்த்துள்ளார் போலும். ஆயினும் ஒரு விவாகம் செய்துகொள்பவனை தாம் விவாகம் செய்துகொண்டதில் ஒரு குறிப்பிட்ட வயதுக்கு கீழ் உள்ள ஒரு பெண்ணை விவாகம் செய்துகொண்டதற்காக தண்டிப்பதென்பது நம் இந்தியாவில் தான் முதல் முதலாக பிரேரேபிக்கப்பட்டிருக்கிறது. முதலில் ராவ் சாஹேப் ஹரிவிலாஸ் சாரதா என்பவர் தமது மசோதாவில் வதூவரர்களில் எவரையாவது தண்டிப்பதற்கு யாதொரு பிரேரேபணையும் செய்யவில்லை. அவர் ஒரு பால விவாகம் செல்லத் தக்கினதல்லவென்றுமாத்திரம் என்று பிரேரேபித்தார்.

**8.** 1898-ம் வருஷத்திய கிரிமினல் புரோஸீஜர்கோட் 190-வது செக்ஷனில் என்ன சொல்லியிருந்தபோதிலும் அதற்கு நிமித்தியமில்லாமல், ஒரு பிரஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட் அல்லது ஒரு டிஸ்டிரிக்ட் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டாரைத் தவிர வேறே எந்தக் கோர்ட்டாரும் இந்த சட்டத்தின்கீழ் ஒரு குற்றத்தைப் பிடிக்கவாவது அல்லது விசாரிக்கவாவது கூடாது.

*இந்தச் சட்டத்தின்கீழ் அதிகார வரம்பு.*

இப்பிரிவில் இச்சட்டத்தின்கீழ் ஏற்படும் ஒரு குற்றத்தைப் பிடிக்க அல்லது விசாரிக்க ஒரு பிரசிடென்ஸி மாஜிஸ்டிரேட் அல்லது ஒரு டிஸடிரிக்ட் மாஜிஸ்ட்ரேட் ஆகிய இவர்களுக்குத்தான் அதிகாரம் உண்டென்றும் வேறே எந்தக் கோர்ட்டாரும் அதிகாரஸ்தரல்லவென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. 1898-ம் வருஷத்திய கிரிமினல் புரோஸீஜர் கோட்டில் ஒரு பிரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட் அல்லது டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட் அல்லது சப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட் அல்லது அதிகாரம் பெற்ற வேறே ஒரு மாஜிஸ்டிரேட் ஆகிய இவர்கள், தமது முன்பாக ஒரு குற்றம் நடந்ததாக விஷயங்கள் அல்லது சங்கதிகள் தெரிவிக்கப்பட்டாலும் அல்லது ஒரு போலீஸ் உத்தியோகஸ்தர் குற்றம் நடந்த விஷயமாய் ஒரு ரிபோர்ட்டு செய்தாலும், அல்லது வேறே எவராவது குற்றம் நடந்த விஷயமாய் சமாசாரங்களைத் தெரிவித்தாலும் அல்லது தமக்கே தெரிந்தாலும் அல்லது தாம் குற்றம் நடந்திருப்பதாக சந்தேகப்பட்டாலும், ஒரு கேஸைப் பிடித்து விசாரிக்கலாமென்றிருக்கிறது. இன்னும், லோகல் கவர்ன்மெண்டார் எம் மாஜிஸ்ட்ரேட்டுக்கும் தம் முன் ஒரு பிரியாது அல்லது ரிபோர்ட்டு தாக்கல் செய்யப்பட்டதானால் அவைகளை ஆதாரமாகக்கொண்டு ஒரு கேஸைப் பிடித்துக்கொள்ளலாம் என்றும் இருக்கிறது.

மாஜிஸ்ட்ரேட்டுகளில் பல வகையுண்டு. கிராமங்களில் இருந்துகொண்டு கிராம பஞ்சாயத்துக் கோர்ட்டு ஆக்டின் பிரகாரம் கேசுகளை விசாரிக்கும்

மேஜிஸ்ட்ரேட்டுக்கு கிராம மேஜெஸ்ட்ரேட் என்று பெயர். ஒவ்வொரு தாலூக்காவிலும் முதல் முதலாக ஸ்டேஷனரி மேஜெஸ்ட்ரேட் என்று நியமிக்கப்பட்டு சிறியதோர் அதிகாரத்தைச் செலுத்தி கிரிமினல் கேசுகளை விசாரிக்கும் மேஜெஸ்டிரேட்டுக்கு 3-வது கிளாஸ் மேஜெஸ்டிரேட் என்று பெயர். தாலுக்காக்களிலேயே சற்று காலம் அதாவது 6-மாதங்களுக்கு மேல் 3-வது கிளாஸ் மேஜெஸ்டிரேட் அதிகாரத்தைச் செலுத்திவந்திருக்கும்மேஜெஸ்டிரேட்டுகளுக்கு இரண்டாவதுகிளாஸ்மேஜெஸ்டிரேட் என்று பெயர். ஒவ்வொரு ஜில்லாவிலும் டிவிஷன்களுக்கு அதிகாரியாயிருக்கும் டிப்டி கலெக்டர்களுக்கு சப்டிவிஷனல் மேஜெஸ்டிரேட்டுகளென்று பெயர். ஒவ்வொரு ஜில்லாவையும் நிர்வாகம் செய்துவரும் கலெக்டர்களுக்கு டிஸ்டிரிக்ட் மேஜெஸ்டிரேட்டு என்று பெயர். சப்டிவிஷனல் மேஜெஸ்டிரேட்டுகளும் டிஸ்டிரிக்ட் மேஜெஸ்டிரேட்டுகளும் முதல்கிளாஸ் மேஜெஸ்டிரேட்டுகள் எனப்படுவார்கள். பிரஸிடென்ஸி மேஜெஸ்டிரேட்டுகள், சென்னை போன்ற மாகாண தலைமை நகரங்களில் கிரிமினல் கேசுகளை விசாரிக்கும் மேஜெஸ்டிரேட்டுகள் இவர்களுக்கும் முதல் கிளாஸ் அதிகாரமுண்டு. முதல் கிளாஸ் மேஜெஸ்டிரேட்டுகளுக்கு தமது முன்பாக நடக்கும் கேசுகளில் சட்டத்திற்கிணங்கி இரண்டு வருஷங்கள் வரையிலும் காவல் தண்டனையும், 1000-ரூபாய் வரையிலும் அபராதமும் விதிக்க அதிகாரம் உண்டு. இரண்டாவது கிளாஸ் மேஜெஸ்டிரேட்டுகளுக்கு ஆறுமாதம் வரையிலும் காவல் தண்டனையும் 200-ரூபா வரையிலும் அபராதமும் விதிக்க அதிகாரமுண்டு. மூன்றுவது மேஜெஸ்டிரேட்டுகளுக்கு ஒரு மாதம் வரையிலும் காவல்தண்டனை விதிக்கவும் 50-ரூபாய் வரையிலும் அபராதம் விதிக்கவும் அதிகாரம் உண்டு

கிரிமினல் புரோஸீஜர் கோட்டின் பிரகாரம், இந்தியன் பீனல்கோட் தவிர மற்றசட்டங்களிலுள்ளகுற்றங்களுக்கு ஒருவருஷத்திற்குக்குறைவான காவல்தண்டனை யென்றுகூறப்பட்டிருந்தால் அவைகளுக்கு அக்குற்றங்களை 3-வது கிளாஸ் மேஜெஸ்ட்ரேட் முதல் அவருக்குஅதிகமானஅதிகாரமுள்ள எம்மாஜெஸ்டிரேட்டும் விசாரிக்கலாமென்றிருக்கிறது. இந்தப் பிரிவு இல்லாதபக்ஷத்தில், இச்சட்டத்தின்கீழ் செய்யப்படும் குற்றங்களை ஒரு மூன்றுவது கிளாஸ் மேஜெஸ்டிரேட்டுகூட விசாரிக்கலாம். ஆனால் இப்பிரிவின் பிரகாரம் பெரியதோர் அந்தஸ்துள்ள ஒரு பிரஸிடென்ஸி மேஜெஸ்டிரேட் அல்லது டிஸ்டிரிக்ட் மேஜெஸ்டிரேட்இவர்கள்தான் குற்றங்களைப் பிடித்து விசாரிக்கலாம். இச்சட்டமானது மதக்கொள்கைகளையும், புராதனமாய் வழங்கிவரும் ஆசார நடவடிக்கைகளையும் சற்று தாக்குவதாயிருப்பதால் தேர்ந்தஅனுபவமுடையடிஸ்டிரிக்டுமேஜெஸ்டிரேட்டுகளும் பிரஸிடென்ஸி மேஜெஸ்டிரேட்டுகளும்தான் இச்சட்டத்தின் கீழுள்ள குற்றங்களை விசாரிக்க வேண்டுமென்று ஏற்படுத்தியிருக்கின்றனர்.

**9.** எந்த விவாஹத்தின் விஷயமாய் இந்தச் சட்டத்தின்கீழ் ஒரு குற்றம் செய்யப்பட்டிருப்பதாய் சொல்லப்படுகிறதோ அந்த விவாஹம் முறைப்படி நடந்தேறிய ஒருவருஷத்திற்குள் பிராது செய்யப்பட்டாலன்றி யற்றப்படி எந்தக் கோர்ட்டாரும் அந்தக் குற்றத்தைப் பிடிக்கக்கூடாது.

குற்றங்களைப் பிடிக்கும் விதம்.

இப்பிரிவானது, சற்று நூதனமான ஏற்பாடுகளைச் செய்வதாகும். கிரிமினல் புரோஸீஜர் கோட்டின் பிரகாரம் சாதாரணமாக, நாம் முன்பு 8-வது பிரிவின் கீழுள்ள குறிப்புகளில் சொல்லியிருப்பதற்கிணங்க, எவ்வித மேஜெஸ்டிரேட்டுக்கும் ஒருகுற்றவிஷயமாய் தாமேநேரில்குற்றங்களைப்பிடித்து விசாரிக்கவும் அல்லது போலீஸார் முதலிய கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களின் ரிபோர்ட்டு மூலமாகவோ அல்லது ஒரு பிராது மூலமாகவோ செய்யும் அறிக்கையின் மூலமாய் குற்றங்களைப் பிடிக்கவும், அதிகாரமுண்டு. ஆனால் இப்பிரிவின் பிரகாரம் ஒரு குற்ற விஷயமாய் ஒரு பிராது கொடுக்கப்பட்டாலொழிய ஒரு மேஜெஸ்டிரேட் (அதாவது டிஸ்டிரிக்ட் மேஜஸ்டிரேட்டுகளும், பிரஸிடென்ஸி மேஜெஸ்டிரேட்டுகளும்) ஒரு கேஸை பிடிக்கவும் கூடாது அல்லது விசாரிக்கவும் கூடாது என்றிருக்கிறது.

“பிராது செய்யப்பட்டாலன்றி” என்பதனால், ஒரு பொதுஜன உத்தியோகஸ்தர் அல்லது அதிகாரியல்லாமல், ஒரு “பாலவிவாகத்தினால்” பாதிக்கப்பட்ட ஒரு பார்ட்டி கொடுக்கும் பிராதுதான் என அர்த்தமாகும். அதாவது போலீஸாரைப்போன்ற கவர்மெண்டு அதிகாரிகள் அதிகார ஹோதாவில் தாவா செய்வதற்கில்லையென ஏற்படும். போலீஸார் தாக்கல் செய்யும் பிராது அறிக்கைக்கு “சார்ஜ் ஷீட் (charge sheet) என்று சொல்லப்படும். இப்பிரிவில் “சார்ஜ் ஷீட்” என்னும் பதங்களே கிடையாது. இன்னும் ஒரு பால விவாக விஷயமாய் செய்யப்படும் பிராது, விவாகம் நடந்தேறி பூர்த்தியான காலத்திற்குப் பிறகு ஒரு வருஷத்திற்குள் தாக்கல் செய்யப்பட வேண்டுமென்றும் கூறப்பட்டிருப்பதால் ஒரு வருஷத்திற்குப் பிறகு செய்யப்படும் தாவாவை கோர்ட்டார் அங்கீகரிப்பதற்கில்லை. ஆனால் சாதாரணமாக இந்தியாவில் வழங்கப்படும் குற்றவிசாரணை சட்டப் பிரகாரம் ஒரு குற்ற விஷயமாய் பிரியாது செய்யப்படுவதற்கு காலஅளவு கிடையாது.

இந்தப் பிரிவினால் சில கோளாறுகளும் வீண் வம்புகளும் பல சச்சரவுகளும் ஏற்படலாம் என்று தோன்றுகிறது. காரணம் என்னவென்றால் ஒரு பால விவாக விஷயமாய் தம்பதிகளைச் சேர்ந்த பெற்றோர்களில் ஒருவர்க்கொருவர் விவாகத்திற்கு சம்மதித்து விவாகம் நடந்த பிறகு, உபய தரப்பினருக்கும் விரோதியான ஒருவர் வேணுமென்று தாவா செய்வதாகப்

பயமுறுத்தினால் அவளை சமாதானம் செய்து தாவா செய்யாமலிருக்க பல முயற்சிகள் செய்யப்படலாம். அது விஷயமாய் எதாவது பத்திரங்கள் ஏற்படும்பக்ஷத்தில் அவை செல்லத்தக்கனவா அல்லவா என்பது விஷயமாய் பல வீண் வியாச்சியங்கள் ஏற்படலாம். இன்னும் இம்மாதிரியான பல நபர்களை சமாதானப்படுத்திக் கொண்டிருப்பதே ஒரு பால விவாகம் செய்தவர்களுக்கு ஒரு அலுவலாக ஏற்படலாம்.

பின்னும், மேற்சொன்னபடி ஒரு பால விவாகம் நடந்த பிறகு, அவ்விவாக விஷயமாய் அடியோடேயாதொரு பிரியாது என்பதே வெளிவராமல் இருக்கலாம். சட்டப் பிரகாரம் ஒரு செய்கை குற்றமென ஏற்படும்பக்ஷத்தில், அதை தண்டிக்கவொட்டாமல் அல்லது அக்குற்றமானது வெளிவரவொட்டாமல் செய்வதற்கு சாதாரண பார்ட்டிகளுக்கே அதிகாரம் கொடுப்பதாகஇருக்கும்பக்ஷத்தில் அதுவே சட்டத்தின்போக்குக்கும் கௌரவத்திற்கும் விரோதமாயிருக்கும்.

இப்பிரிவில் இன்னார்தான் பிராது கொடுக்கலாம் என்றும் அல்லது இன்னார் கொடுக்கக்கூடாதென்றும் ஒன்றும் சொல்லப்படவில்லை. இச்சட்டத்திலும் இது விஷயமாய் கவர்மெண்டுக்கு உபவிதிகளை ஏற்படுத்த அதிகாரம் உள்ளதாக ஏற்படவில்லை.

மேற்சொல்லிய காரணங்களால் இப்பிரிவானது நன்றாக கோர்க்கப்படவில்லையென்றும் பல சந்துகளும் தவறுகளும் இருப்பதாகவேதோன்றுகிறது.

இந்த ஆக்டின்படிக்கான குற்ற விஷயமாய் பிரதம விசாரணை செய்வது.

**10.** இந்த சட்டத்தின்கீழ் ஒரு குற்றத்தைப் பிடிக்கும்கோர்ட்டார் 1898ம் வருஷத்திய கிரிமினல் புரோஸீஜர் கோட் 203-வது பிரிவின்படி பிராதைத் தள்ளிவிட்டாலன்றி, மற்றப்படி அவர்கள், ஷை கோட் 202-வது பிரிவின்படி தாங்களே விசாரணை செய்யவேண்டும்; அல்லது அப்படிப்பட்ட விசாரணை நடத்தும்படி தங்களுக்குக் கீழ்ப்பட்டுள்ள யாதொரு முதல் வருப்பு மாஜிஸ்ட்ரேட்டுக்கு கட்டளையிடவேண்டும்.

குறிப்புகள்.

இப்பிரிவானது, ஒரு பிராது தாக்கல் செய்யப்பட்டபொழுது எதிரி கோர்ட்டுக்கு வரவழைக்கப்படுமுன் கோர்ட்டார் அப்பிராது விஷயமாய் பிரதம விசாரணை நடத்தின பிறகு எதாவது குற்றம்நடந்திருக்கலாமென்று ஏற்பட்டால் தான் கேஸைப் பிடித்துக்கொள்ளலாமென்று கூறுகிறது.

கிரிமினல் புரோஸீஜர் கோட் 200, 201, 202, 203, 204 ஆகிய இப் பிரிவுகள் ஒரு கேஸ் தாக்கல் செய்வதைப்பற்றியும் அவைகளைப் பிடிக்கும் விதத்தைப்பற்றியும் கூறுகின்றன.

கிரிமினல் புரோஸீஜர் கோட் 200-வது பிரிவானது,ஒரு நபர்(Private Party)பிராதை கொடுக்கும்பொழுது ஒரு மாஜிஸ்ட்ரேட் உடனே அவரை பிரமாணம்செய்து வாக்குமூலம் கேட்டு அவருடைய வாக்குமூலத்தை எழுதிக்கொள்ளவேண்டும் என்று கூறுகிறது. ஆனால், ஒரு பிரஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட்டு, ஒரு பிராதை கொடுப்பவரிடமிருந்து பிரமாண வாக்குமூலம் வாங்கித்தான் தீரவேணுமென்று நிர்பந்தம் கிடையாது என்றும் அந்த பிரிவில் கண்டிருக்கிறது.

ஷை கோட் 201-வது பிரிவில், ஒரு மேஜெஸ்ட்ரேட்டு முன்பாக அவர் பிடித்து விசாரிக்கக்கூடாத ஒரு பிராது கொடுக்கப்பட்டதானல், அதை சரியான அதிகாரமுள்ள கோர்ட்டுக்கு கொடுக்கும்படி அம்மாஜிஸ்ட்ரேட்டு உத்திரவு செய்யவேண்டுமென்று இருக்கிறது. ஷை கோட் 202-வது பிரிவில்,ஒரு மேஜெஸ்ட்ரேட் தன் முன்பு ஒரு குற்றவிஷயமாய் ஒரு பிராது கொடுக்கப்பட்டதானல், அக்குற்ற விஷயமாயுள்ள பிராதை அவர் உடனே பிடித்துக்கொள்ள அதிகாரம் இருந்தபோதிலும், சிற்சில சமயங்களில் அவருக்கு யுக்தமென்று தோன்றும்பக்ஷத்தில் உடனே குற்றம் சாட்டப்பட்டவரை தன் முன் ஆஜராவதற்கு உத்திரவுசெய்யாமல், தானவது அல்லது தனக்கு கீழ்ப்பட்டுள்ள ஒரு மேஜெஸ்ட்ரேட்டாலாவது அல்லது ஒரு போலீஸ் உத்தியோகஸ்தராலாவது அல்லது வேறொரு மனிதராலாவது அக் குற்ற விஷயமாய் ஒரு பிரதம விசாரணை நடத்தலாம் என்றிருக்கிறது. இதன் காரணம் என்னவென்றல், ஒருவேளை, எந்த குற்ற விஷயமாக தன்முன் பிராது செய்யப்பட்டதோ அந்த குற்றமானது, உருவு ஏற்படாத பக்ஷத்தில் எதிரியை வீணக கோர்ட்டுக்கு இழுத்து அலக்கழிக்காமல் இருக்கலாமென்பது. ஒரு பிரதம விசாரணையில் சாக்ஷிகளின் வாக்குமூலங்களினல் ஒரு குற்றம் நடந்ததாக ஏற்படும் பக்ஷத்தில் மாஜிஸ்ட்ரேட் எதிரியை சம்மன் செய்யலாம்.

கிரிமினல் புரோஸீஜர் கோட் 203-வது பிரிவில், ஒரு மேஜெஸ்ட்ரேட் தன் முன்பு கொடுக்கப்படும், ஒரு பிராது விஷயமாக பிராது கொடுத்தவரை பிரமாண விசாரணை செய்த பிறகு அவ்விசாரணையினல் யாதொரு குற்றமும் நடந்ததாக ஏற்படாவிட்டாலும் அல்லது மேற்சொல்லிய 202-வது பிரிவின் கீழ் ஒரு பிரதம விசாரணையினல், எதிரிபேரில் யாதொரு குற்றமும் ஏற்படாது என்றும், இனி கேஸை நடத்துவதற்கு சரியான் காரணங்கள் இல்லை யென்றும் தோற்றும் பக்ஷத்தில், கேஸை உடனே தள்ளிவிடலாம் எனறும் கண்டிருக்கிறது. கிரிமினல் புரோஸீஜர் கோட் 204-வது பிரிவில், ஒரு மாஜிஸ்ட்ரேட்டினுடைய அபிப்பிராயத்

தில் தன் முன்பு கொடுக்கப்படும் ஒரு பிராது விஷயமாக எதிரியை சம்மன் செய்து சாக்ஷிகளை விசாரிக்க வேண்டுமென்று தோற்றும் பக்ஷத்தில், உடனே சட்டப்பிரகாரம் எதிரியை வரவழைத்து கேஸை நடத்தலாமென்றிருக்கிறது.

இந்த சட்டத்தின் 10-வது பிரிவானது கிரிமினல் புரோஸீஜர்கோட் 200, 201, 202, 203, 204 இந்த பிரிவுகளில் சொல்லப்பட்டிருக்கும் தோரணையை சற்று மாற்றுவதாயிருக்கிறது. இப்பிரிவின் பிரகாரம் ஒரு மாஜிஸ்ட்ரேட் தன் முன்பு கொடுக்கப்படும் ஒரு பிராது விஷயமாக பிரதம விசாரணையில்லாமல் அதைப் பிடித்து நடத்தக்கூடாது என்று உள்ளது. ஆனால் ஒருமாஜிஸ்ட்ரேட் தன்முன்பு தாக்கல்செய்யப்படும் ஒருபிராது விஷயமாக, பிரதம விசாரணையில்லாமலே, பிராதை தள்ளிவிடலாம். எதிரியை வரவழைப்பதற்கு முன்பாக அவசியம் ஒரு பிரதம விசாரணை நடந்தே தீரவேண்டும். ஆனால் கிரிமினல் புரோஸிஜர் கோட் 202-வது பிரிவில், சாதாரணமாக கேசுகளைப் பிடிப்பதில், ஒரு மாஜிஸ்டிரேட் தனக்கு யுக்தமென்று தோற்றும்பக்ஷத்தில் ஒரு பிரதம விசாரணை செய்யலாமென்றுதான் இருக்கிறது.

தவிர இச்சட்டத்தின் 10-வதுபிரிவின்பிரகாரம் கிரிமினல் புரோஸிஜர் கோட் 202-வது பிரிவின்கீழ் ஒரு பிரதம விசாரணை செய்பவர் ஒரு முதல் கிளாஸ்மாஜிஸ்ட்ரேட்டாகத்தான் இருக்கவேண்டும். அதாவது போலீஸ்அதிகாரிகள் அடியோடே இவ்வாக்டின்கீழுள்ள குற்றங்களை பிரதம விசாரணை செய்வதற்கில்லையென்று ஏற்படும்.

இப்பிரிவானது முன் சொல்லிய 8-வது பிரிவையொட்டிசேர்க்கப்பட்டிருக்கிறது. அதாவது இச்சட்டத்தின்கீழ் ஏற்படும் குற்றங்கள் ஜனங்களுடைய குடும்ப வியவகாரங்களையும், குடும்ப வாழ்க்கையின் நடவடிக்கைகளையும் தாக்குவதாக இருப்பதால், அவைகள் ஜாக்கிரதையுடனும் உலக அனுபவமுள்ள தேர்ந்த மாஜிஸ்ட்ரேட்டுகளால் விசாரணை செய்யப்படவேண்டுமென்பது.

பிராது கொடுப்பவரிடமிருந்து ஜாமீன் வாங்க அதிகாரம்.

**11.** (1) பிராது கொடுத்தவரை அப்பிராது தாக்கல் செய்யப்பட்டவுடன் விசாரித்தபிறகும், குற்றம் சாட்டப்பட்ட நபரை ஆஜராகும்படி நிர்பந்திப்பதற்காக ப்ராஸெஸ் என்னும் கட்டளை பிறப்பிப்பதற்கு முன்னும், எப்போதாகிலும், கோர்ட்டார், எழுத்து மூலமாய் அப்படி செய்யாததற்கு காரணங்களைத் தெரிவித்தாலொழிய, 1898-ம் வருஷத்து கிரிமினல் புரோஸிஜர் கோட் 250-வது பிரிவின்படி பிராது கொடுத்தவர் செலுத்தவேண்டுமென்று

கட்டளையிடப்படக்கூடிய அபராதத்தொகையை (compensation) செலுத்துவதற்கு ஜாமீனாக நூறு ரூபாய்க்கு மேற்படாத ஒரு தொகைக்கு ஜாமீன்தார்கள் சகிதமாகவோ ஜாமீன்தார்கள் இல்லாமலோ ஒரு முச்சலிக்கை எழுதிக் கொடுக்கும்படி பிராது கொடுத்தவருக்கு உத்தரவுசெய்யவேண்டும்; மேலும் கோர்ட்டார் நிஷ்கரிஷை செய்யும் உசிதமான காலத்திற்குள் ஷை ஜாமீன் கொடுபடாவிட்டால் பிராது தள்ளிவிடப்படவேண்டும்.

(2) இந்தப் பிரிவின்படி எழுதி வாங்கப்பட்ட முச்சலிக்கையானது 1898ம் வருஷத்திய கிரிமினல் புரோஸிஜர் கோட்டின்படி எழுதி வாங்கப்பட்ட முச்சலிக்கையாகக் கருதப்பட்டு அந்தக் கோட்டின் 42ம் அத்தியாயம் அப்பிரகாரமே பிரயோகிக்கப்படும்.

### குறிப்புகள்.

இப்பிரிவு இச்சட்டத்தில் மிகவும் முக்கியமானதோர் பிரிவாகும். இப்பிரிவினால், இச்சட்டத்தின்கீழ் நடந்ததாக சொல்லப்படும் ஒரு குற்ற விஷயமாய் வீணான அல்லது பொய்யானதும் தொந்திரவு செய்வதற்கானதுமான பிராதுகளை தடுப்பதாகும். நாம் முன்பு இச்சட்டத்தின் 9-வது பிரிவில் ஒரு பிராது தொடுப்பவருக்கு எவர் அருகராவர் என்பதைப்பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லையென்று சொன்னோம். அதனால் எவராலாகிலும் இச்சட்டத்தின்கீழ் ஒரு குற்ற விஷயமாய் பிராது தாக்கல் செய்யப்படலாம் என்று ஏற்படும். அம்மாதிரி இருக்கும்பக்ஷத்தில், ஒருவர் வேணுமென்று, பொய்யாகவோ அல்லது தப்பு அம்சங்களைக் கண்டோ எதிரியை அலக்கழிக்கச் செய்யவேணுமென்று ஒரு பிராதை தாக்கல் செய்ய வசதி ஏற்படலாம்; ஒருவர் ஒரு பிராதை தாக்கல் செய்துவிட்டு, எதிரியுடன் ராஜி செய்துகொண்டு கோர்ட்டுக்கு வராமலே இருக்கலாம். இப்படி செய்வதால் எவராவது கோர்ட்டின் அதிகாரத்தைக்கொண்டு தமது சுயநலத்தைத்தேடி கோர்ட்டின் கௌரவத்தையே அலக்ஷியம் செய்வதுபோல் ஏற்படும். ஆகையால், ஒருவேளை, ஒரு பிராது செய்பவர் வேணுமென்று பொய்யாக பிராது தாக்கல் செய்தார் என்று ஏற்படும்பக்ஷத்தில் அவருக்கு அபராதம் விதிப்பதற்காக, அவர் ரூபா 100-க்கு ஜாமீன் ஆஜர்படுத்தும்படி இப்பிரிவில் உத்திரவு செய்யப்பட்டிருக்கிறது.

கிரிமினல் புரோஸிஜர் கோட் 250-வது பிரிவில், ஒரு மாஜிஸ்ட்ரேட் தன் முன்பாக செய்யப்படும் ஒரு கேஸில் எதிரி பேரில் யாதொரு குற்றமும் ஏற்படவில்லையென்றும், அவ்வெதிரி பேரில் சொல்லப்படும்சாட்சிகள் பொய்யென்றும் அற்பமானது அல்லது அலக்கழிக்கச் செய்வது என்றும்

தமக்குத் தோற்றும்பக்ஷத்தில். உடனே பிராது கொடுத்தவர் பேரில் தொடர்ந்து அவர் பொய் கேஸ் செய்ததாக ஏற்படும்பக்ஷத்தில் அவருக்கு 100 ரூபாய்க்கு அதிகப்படாமல் அபராதம் விதிக்கலாமென்று இருக்கிறது.

இந்தப் பிரிவில், முன் ஜாக்கிரதையாக, சில காரணங்களுக்குத் தவிர, ஒவ்வொரு கேஸிலும், பிராதுசெய்பவர் ஜாமீன் ஆஜர்ப்படுத்திவிட்டுத்தான் தாவாவை ஆரம்பம் செய்யலாமென்றிருக்கிறது. ஒரு ஜாமீன் பத்திரமானது, கிரிமினல் புரோஸீஜர்கோட் 42-வது அதிகாரத்தின் பிரகாரம் ஒரு பாண்டென கருதப்பட்டு, அது பறிமுதல் செய்யப்படும்பக்ஷத்தில், ஜாமீன் பத்திரத்தின் ஷரத்துக்கள் பிரகாரம் தொகை வசூலிக்கப்படுமென்றும் கண்டிருக்கிறது.

இந்த சட்டத்தின்கீழ் ஒரு பிராது தாக்கல் செய்யப்பட்ட பிறகு தாவா ராஜீசெய்யப்படமுடியுமா, அல்லது முடியாதா என்று ஸ்பஷ்டமாக விளங்கவில்லை. ராஜிசெய்யப்படாதென்று நிலவரமாக இல்லாதிருப்பதால் ராஜிசெய்துகொள்வதற்கு தடையொன்றுமில்லையென்றே ஏற்படலாம். தவிர இப்பிரிவே ஒரு பெருந்தடையாக இருக்குமென்று தோற்றவில்லை. உதாரணமாக ஒருவன் ரூபா 100-க்கு ஜாமீன் கொடுத்து ஒரு பிராது தாக்கல் செய்த பிறகு அம்மாதிரி தாக்கல் செய்திருப்பதை ஆதாரமாகக் கொண்டு, எதிரியை மிரட்டி, தாம் செலுத்தியிருக்கும் ஜாமீன் தொகைக்கு மேலாக பணத்தைப் பெற்றுக்கொண்டு எதிரியுடன் ஒன்று சேர்ந்து ராஜிசெய்துகொண்டு கோர்ட்டுக்கே வராமல் இருப்பானாயின் அவ்வித ஒரு சந்தர்ப்பத்தைத் தடுப்பதற்கு இப்பிரிவிலாவது அல்லது இச்சட்டத்தின் மற்ற பிரிவுகளிலாவது யாதொன்றும் காணோம். இச்சட்டத்தினால் வீண்வியவகாரங்கள் அதிகரித்து ஜனங்களில் ஒருவரையொருவர் கோர்ட்டுக்கு இழுப்பதாக பயமுறுத்தி எளியவர்களை வலியவர் தொந்திரவு செய்வதற்கு ஹேதுவாகும். கோர்ட்டுகளின் அதிகார கௌரவத்திற்கே ஹானி செய்வதான சந்தர்ப்பங்கள் பல ஏற்படலாம்.

---

Printed at the Ananda Printing Works, Tiruvallur.

☞ தயவுசெய்து தங்கள் சிநேகிதர்களுக்கு காட்டுங்கள்.

# அகில இந்தியா லா ஜர்னல்.

ஓர் உயர்ந்த மாதாந்திர சட்டப் பத்திரிகை.

முந்துங்கள்! வெகு சிறந்தது! தமிழ் நாட்டு மக்களுக்கு வெகு பிரயோசனமானது.

வக்கீல்களால் அழகிய நடையில் எழுதப்பெற்று உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிட்டு வரப்படுவது.

மாதம் 1-க்கு 64 பக்கங்களுக்கு குறையாமல் அரிய சட்ட விஷயங்களும் ஹைகோர்ட்டில் தீர்மானமான சட்ட நிரூபண கேஸுகளும் வெளிவருகிறது.

இக்காலத்தில், ராஜீய விஷயங்களிலும், மற்ற பெரிய வியவஹார விஷயங்களிலும், வியாபார விஷயங்களிலும், யாவரும் தமது நுண்ணறிவைச் செலுத்திவருகையில், ஒவ்வொருவரும் தம்முடைய ராஜீய உரிமை, கடமை அந்தஸ்து முதலியவைகளில் தேர்ச்சிபெற்று தம்மையும் தமது நாட்டின் மக்களையும் நாட்டின் பெருமையும் கௌரவமாகவும் மதிப்புடனும் பாராட்டி வருவது மிகவும் இன்றியமையாத ஒரு அவசியமாகும். மேல்நாடுகளில் எங்கு பார்த்தாலும் சுயராஜ்ஜியமென்றும், ஜனசமூக ஆட்சியென்றும், ஜனநாயக உத்தியோகமென்றும், வழங்கப்பட்டு, அரசாங்கத்தார்களும் ஜனங்களுடைய நன்மையும் சௌகரியத்தையும் சரிவர கவனித்து வருவதின் காரணம் என்னவென்றால், ஒவ்வொரு நாட்டு வாசியும் தமது உரிமையை நன்கு உணர்ந்து வருவதல்லாமல் தமது வியவஹாரங்களில் மிகவும் திடஸ்தராகயிருப்பதுபற்றி அவருடைய அபிப்பிராயத்தை கட்டாயமாக அதிகார வர்க்கத்தினர் மேற்கொண்டு அரசாங்கத்தை நடத்திவருவதினால்தான். நமது நாட்டில் இம்மாதிரியான ஒரு அந்தஸ்தையடைய ஒவ்வொருவரும் பொதுவாக தமது வியவஹார உரிமைகளில் மிகவும் தேர்ச்சியடைந்திருப்பது மிகவும் அவசியமாகும். நமது தமிழ்நாட்டு மக்கள் இவ்வாறு ஒருவித தேர்ச்சியையடைய ஒரு பெருந்தடையாக இருப்

பது எதுவென்றால், அரசாங்கத்தில் சகல வியவஹாரங்களும் மற்றுமுள்ள நடவடிக்கைகளும் நடத்தேறிவரும் ஆங்கில பாஷையை பெரும்பாலோர் நன்கு அறியாமலிருப்பதுதான். இதுவே, நமது மக்கள் சட்டங்களிலும் வியவஹாரங்களிலும் நல்ல பயிர்ச்சியடைவதை தடை செய்வதாயிருக்கிறது. இவ்வாறுள்ள குறையை நீக்குவதற்கு, தமிழில் சட்டங்களும் வியவஹாரங்களும் சட்ட அம்சங்களும் நிறைந்த ஒரு பத்திரிகை மிகவும் அவசியமென்பதை ஒருவரும் மறுக்க முடியாது. "அகில இந்தியா லா ஜர்னல்" ஒருவாறு இக்குறையை நீக்கி ஆங்கில மறியாத தமிழ் மக்களுக்கு சட்ட அம்சங்களை நன்கு போதித்து ஒவ்வொருவரையும் தமது செல்வாக்கிலும், இடத்திலும், புத்தியிலும், பொறுப்பிலும் உயர்ப்பிக்கும் என்று நாம் சொல்லத் துணிகிறோம்.

நமது "அகில இந்தியா லா ஜர்னல்" பத்திரிகையில், ஒவ்வொரு மாதமும் சென்னை, பம்பாய், கல்கத்தா, அலஹாபாத், ரங்கூன் முதலிய ஹைகோர்ட்டுகளிலும், பிரிவிகௌன்சிலிலும், ஹிந்து சட்டம், மகம்மதிய சட்டம், குற்றங்களின் சட்டம், சிவில் கோர்ட்டுகளில் நடக்கும் வியவஹாரரீதி, காண்ட்ராக்ட் ஆக்டு, (வியாபார ரீதிகளில் நடக்கும் சாமான்கள் விற்பனை, கொதுவை, ஏஜெண்டுகளின் அமைப்பு முதலியவை அடங்கிய சட்டம்) நெகோஷியபில் இன்ஸ்ட்ருமெண்டு ஆக்டு (உண்டி, புரோநோட், செக்கு இவை சம்பந்தமான சட்டம்) டிரான்ஸ்பர் ஆப்பிராபர்ட்டி ஆக்டு, (விக்கிரயம், அடமானம், தானம், இவைகளைப் பற்றின சட்டம்) எஸ்டேட்ஸ்லாண்டு ஆக்டு (ஜமீன்தார்கள், மிட்டாதார்கள், சுரோத்திரியதார்கள், ஜாகிர்தார்கள் இவர்களைப் பற்றின சட்டம்) முதலிய இன்னும் பல்விதமான சட்டங்களின்கீழ் தீர்மானிக்கப்படும் கேஸுகளும் கேஸுகளின் குறிப்புகளும் இனிமையான தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வருவதல்லாமல், சென்னை ஸ்தல ஸ்தாபன சுயஆட்சி, ஓட் உரிமை, கோர்ட்டுகளில் வியவஹாரம் நடத்தும்வகை, கோவாபரேஷன் என்னும் ஐக்கிய நாணய சங்கக் கிளர்ச்சி, கவர்மெண்டின் அமைப்பு, அதிகார எல்லை முதலிய அரிய பெரிய விஷயங்களைக் குறித்து உயர்ந்த வியாசங்களும் வெளிவருகின்றன. நமது ஜர்னல், ஜமீன்தார்கள், உண்டிக்கடை வியாபாரிகள், மிட்டாதார்கள், சுரோத்திரியதார்கள், லோகல்போர்டு மெம்பர்கள், ஆனரரி மாஜிஸ்ட்ரேட்டுகள், பஞ்சாயத்து கோர்ட்டு மெம்பர்கள், வக்கீல் குமாஸ்தாக்கள், பெடிஷன் எழுதுவோர் இன்னும் மற்றும் வியவஹாரஸ்தர்கள் இவர்களுக்கு மிகவும் உபயோகமானது.

எமது ஜர்னலுக்கு ஏப்ரல் மாதமுதல் மார்ச்சு மாதம் வரையிலும் ஒரு வருஷக் கணக்கு. ஒரு வருஷ சஞ்சிகைகளின் பக்கங்களைப் பிரித்துத் தனியாக சுமார் 800-பக்கங்கள் அடங்கிய ஒரு வால்யூமாக பைண்டு செய்யும்படியான ஏற்பாட்டுடன் நடந்து வருகிறது.

நாம் இத்துடன் எமது ஜர்னலின் சில மாதிரிப் பக்கங்களை வைத்திருக்கிறோம். இதுவே ஒரு முழு சஞ்சிகையல்ல. மாதிரிப் பக்கங்களே உங்களுக்குப் பத்திரிகையின் பூரண உருவத்தை ஒருவாறு தெரிவிக்கும் என்று நம்புகிறோம். காகிதத்தின் விலை மிகவும் உயர்ந்ததாயிருப்பதாலும் அச்சுசிலவு அதிகமாயிருப்பதாலும் முழு சஞ்சிகைகளை இனாமாக அனுப்ப முடியவில்லை. ஒவ்வொரு சஞ்சிகையையும் 0—8—0 மதிப்பிட்டிருக்கிறது. வேண்டுவோர் 0—8—0 ஸ்டாம்பு அனுப்பினாலும் அல்லது 0—8—0 மணியார்டர் அனுப்பினாலும் ஒரு மாதிரி சஞ்சிகை அனுப்பப்படும்.

### சந்தா விவரம்.

| | |
|---|---|
| ஒரு வருஷம் 1-க்கு தபால்செலவு உள்பட ரூபா 5—0—0 | சிங்கப்பூர் பினாங்கு முதலிய இடங்களுக்கு ரூபா 5—12—0 |

தனி சஞ்சிகை விலை அணா 0—8—0

வேண்டுவோர்,

M. S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L.,
மானேஜர், அகில இந்தியா லா ஜர்னல் ஆபீஸ்,
80, கொண்டமாபுரம் தெருவு, திருவள்ளூர்.
என்று எழுதவும்.

## அகில இந்தியா லாஜர்னல் பத்திரிகையைப்பற்றி வந்திருக்கும் அபிப்பிராயங்கள்.

“சுதேசமித்திரன்” பத்திரிகை எழுதுவதாவது:—

பொது ஜனங்களுக்கு உபயோகமான அனுபவ சட்ட ஞானத்தை இந்தியா கவர்மெண்டு சட்டம், மாகாண கவர்மெண்டு சட்டம், முதலியவைகள் மூலமாயும் ஹைகோர்ட்டு தீர்ப்புகளின் மூலமாயும் உண்டாக்க தமிழில் மாதம் ஒருமுறை வெளியிட உத்தேசத்தோடு வெளிவந்திருக்கும் “அகில இந்தியா லா ஜர்னல்” என்ற பத்திரி

யின் முதல் சஞ்சிகை எமது பார்வைக்கு அனுப்பப்பட்டது. அதில் முதல் 24 பக்கங்களில் கேசுகளின் சுலபமான குறிப்புகளும் இதற்குப் பின்னிருக்கும் 32 பக்கங்களில் கேஸ் ரிபோர்ட்டுகளும் காணப்படுகின்றன. இவை சட்டஞானம் தனிப்பட இல்லாதவர்களுக்கும் இனிமையாயிருக்கும்படி தெளிவான நடையில் எழுதப்பட்டிருக்கின்றன.

“ நவசக்தி பத்திரிகை எழுதுவதாவது.

அகில இந்தியா லாஜர்னல்:—இது திருவள்ளூரினின்று வெளிவரும் ஒரு மாதப் பத்திரிகை. ஆங்கிலமறியாதவர் சட்ட சம்பந்தமான பல விஷயங்களை அறிந்துகொள்ள இப்பத்திரிகை பெரிதும் துணைசெய்யும். நீதிமன்றங்கள் பலவற்றுள் அவ்வப்பொழுது செய்யப்படும் முக்கியமான தீர்ப்புகள் இதில் காணப்படுகின்றன. இவை நியாயவாதிகளுக்கும் கிராமங்களில் நீதிபரிபாலனம் செய்வோர்க்கும் வழிகாட்டியாயிருக்கும் என்பதில் ஐயமில்லை.

“ சுயராஜ்யா ” (தமிழ்) பத்திரிகை எழுதுவதாவது:—

துரைத்தன சட்டங்களை தமிழ் மொழியில் விளக்குவதே ஒரு புதிய பெரிய முயற்சியாகும். தென்னாட்டு.....கச்சேரி வியவஹாரங்களைக் கொண்டுள்ளவர்கள் சட்ட பூர்வமான நடப்புகளையும் நீதிபதிகளின் தீர்ப்புகளையும் அறிந்து செய்வார்களாயின் பொன்மலர் நாற்றமுடைத்து என்னலாம். ஆங்கிலம் அறியாத சட்ட அறிஞர்களுக்கு இவ்வளவு காலமாக இருந்த ஒரு குறையை இம்மாலிகை நீக்குகின்றது. சென்னை நீதி ஸ்தல வியவஹாரங்களும் அகில இந்தியா சர்ச்சைகளும் இங்கு தரப்படுவதற்கும் இளந்தமிழ் நடையில் இலங்குவதற்கு உரியதாயிருக்கின்றன...........இம்மாலிகை அழகுபெற்று விளங்குவதென்றே நினைக்கிறோம். தமிழர் ஆதரிக்கவும்.

சென்னை “ ஹிந்து ’ பத்திரிகை எழுதுவதாவது:—

தமிழ் தெரிந்த மக்களுக்கு உதவும்படி நிர்மாண சட்டத்தை மொழிபெயர்த்து எழுத முன்வந்திருக்கும் இம்முயற்சியானது அவசியம் வரவேற்கத்தக்கது. நமது நாட்டில் வழங்கும் சட்டத்தில் பெரும்பான்மையும், சட்டப் பத்திரிகைகளில் பிரசுரப்படுத்தியிருக்கும் உயர்ந்த கோர்ட்டுகளின் தீர்மானங்களில் காணப்படுகின்றன. இ

ஷித ரிபோர்ட்டுகள், தீர்மானங்கள் எழுதப்பட்டிருக்கும் ஆங்கில பாஷையிலேயே இருக்கின்றன. ரிபோர்ட்டுகளில் உள்ள தீர்மானங்களை தமிழ் மாத்திரம் படிக்கத் தெரிந்தவர்களுக்காக முதல் முதலாக மொழிபெயர்த்து வாவிருக்கும் இந்நூதன முயற்சி அவசியம் ஆதரிக்கப்பட வேண்டும். இப்பத்திராசிரியர்கள், கடினமான சட்ட பதங்களுக்கு சரியான தமிழ் பதங்களைத் தேர்ந்தெடுக்க மிகுந்த முயற்சி எடுத்துக்கொண்டிருப்பதாக எங்களுக்கு தெரியவருகிறது. நாளடைவில் தமிழ் மக்கள் இப்பத்திரிகையில் உபயோகப்படுத்திவரும் பிரயோகங்களை அனுஷ்டித்துக்கொள்வார்கள் என்பதைப் பற்றி எமக்கு சந்தேகமில்லை. சட்ட வசனம் என்னவென்றால் சட்டம் தெரியாமலிருப்பது ஒரு சமாதானமாகாது என்பது. தமிழ் மக்களுக்கு சட்டங்களினுடைய நுட்பங்களையூட்டி வாமுயலும் இம்முயற்சியினால் அறியாமை பெரும்பாலும் நீங்குமென்றே நம்பலாம்.

### “ தமிழ்நாடு ” எழுதுவதாவது:—

திருவள்ளூரினின்று வெளிவரும் அகில இந்தியா லா ஜர்னலின் ஜூன்மாதத்திய சஞ்சிகை நமது பார்வைக்கு வரப்பெற்றோம். இது ஒரு அரிய மாதாந்திர சட்டப் பத்திரிகையாகும். சட்ட விஷயங்களில் தற்காலம் கல்வி கற்றோரே, அவரினும், சட்டம் கற்றோரே முற்றிலும் அறிந்திருக்கின்றனர். பொது ஜனங்கள் சட்ட விஷயங்களை அறியாது அதிக கஷ்டத்திற்குள்ளாகின்றனர். அத்தகையருக்கும் படித்தவர்களுக்கும் இப்பத்திரிகை இன்றியமையாதது. இதில் சிவில் கிரிமினல் கோர்ட்டுகளில் நடக்கும் சகல வியவகாரங்களும் நன்கு விளக்கி எழுதப்பட்டிருக்கிறது. கோர்ட்டில் பொழுது போக்குகின்ற வக்கீல் குமஸ்தாக்களும், ஓயாது விவகாரம் நடத்தும் பொது ஜனங்களுக்கும், இது இன்றியமையாதது. வழக்குகளை நடத்தும் நேயர்களுக்கு இப்புத்தகத்தில் கல்கத்தா, பம்பாய், டில்லி முதலிய இடங்களின் நடக்கும் நடவடிக்கைகளின் மாதிரிகளும், சென்னை நீதிஸ்தலத்தில் நடக்கும் முக்கிய வழக்குகளும், ஜட்ஜுகளின் தீர்ப்புகளும் இதில் வெளிவருவதினால் வெளியூர்களில் இருக்கும் வக்கீல்களுக்கும், குமாஸ்தாக்களுக்கும், இப்பத்திரிகை அதிக பயனுள்ளதாகும். இதனை யாவரும் போற்றி நன்மை யடைவாராக.

---

சென்னை "லா வீக்லி" சட்டப் பத்திரிகை எழுதுவதாவது—

"திருவல்லிக்கேணி M. S. பார்த்தசாரதி அய்யங்கார் B. A., B.L., அவர்களால் பிரசுரம் செய்யப்படும் தமிழ் அகில இந்தியா லாஜர்னல்" பத்திரிகையை வரப்பெற்றோம். மேற்படி ஜர்னலின் முதல் மூன்று சஞ்சிகைகளை நாம் சற்று எச்சரிக்கையாகவே குணதோஷங்களை ஆராய்வதற்கென்றே பரிசோதித்துப் பார்த்ததில், நமது நாட்டின், விஷயங்களில் மிகுந்த தேர்ச்சியடைந்திருக்கும் ஆங்கிலபாஷை யறியாதிருக்கும் சட்ட வியவஹாரஸ்தர்களுக்கு இப்பத்திரிகை பெரிதும் துணைசெய்யும் என்பதை நாங்கள் திடமாகச் சொல்லுவோம். ம-ள-ள-ஸ்ரீ M. S. பார்த்தசாரதிஅய்யங்கார் அவர்கள்தாம் பிரசுரப்படுத்தியிருக்கும் இச்சஞ்சிகைகளில் கேஸ்களைப்பொறுக்கியெடுப்பதில் அதிக கவனம் செலுத்தியிருக்கிறார். சட்ட பாகங்கள் மிகவும் நுட்பமாகவும் கடினமாகவும் இருப்பினும், அவைகளின் மொழிபெயர்ப்பு அவைகளின் உண்மையான அர்த்தஸ்வரூபத்தை நன்கு விளக்குகிறது. யாவருக்கும் சுலபமாக விளங்கும்படியான நடையில் அவைகள் எழுதப்பட்டிருப்பதை கவனிக்குமிடத்து, ம-ள-ள-ஸ்ரீ M. S. பார்த்தசாரதி அய்யங்கார் அவர்கள் தாம் மேற்கொண்டிருக்கும் இக்காரியத்தை மிகவும் சரியாகவும் திருப்திகரமாகவும் நடத்துவதற்கு மிகுந்த புத்திகூர்மையும் சாமர்த்தியமும் வாய்ந்தவர் என்றுதெரியவருகிறது. நமது நாட்டில் ஒரு தமிழ் சட்டப்பத்திரிகை வெகுநாளாக இல்லாமல் பெருங்குறைவாயிருந்தது. ம-ள-ள-ஸ்ரீ M.S. பார்த்தசாரதிஅய்யங்கார் அவர்கள் இனிகூடியசீக்கிரத்தில் பெரியதோர் ஆதரவுபெற்றுஇந்த ஜர்னல் இன்றியமையாதிருக்கும் தமிழ்மக்களால் மேன்மேலும் ஆதரிக்கப்படுவார் என்று நம்பத்துணிகிறோம். ம-ள-ள-ஸ்ரீ M.S. பார்த்தசாரதி அய்யங்கார் அவர்கள் தமது இம்முயற்சியில் ஜெயம்பெற்று வருவதல்லாமல் அவருடைய ஜர்னல் தினே தினே நன்கு மதிக்கப்பட்டு, வளர்ந்து செழுமையுடன் வேரூன்றி ஸ்திரம் பெறும் என்று நாம் ஆசி கூறுவோம்.

"தேச ஊழியன்" எழுதுவதாவது :—

அகில இந்தியா லாஜர்னல், இம்மாத வெளியீடு தமிழ் நாட்டிற்கு பெரிதும் பயன்தரத்தக்கது. தமிழ்நாடு நீதிமன்றங்களில் ஆங்கிலத்தில் பேசும் நியாயவாதிகளுக்கு தமிழிலும் வழக்குகளை தாராளமாய் எடுத்துரைக்கலாமென்பதற்கு இதன் உதயமே தக்க சான்றாகும். சட்ட சம்பந்தமான அறிவும் தமிழ் மக்களுக்கு இன்றியமையாததாதலால் தமிழ்மக்கள் ஆதரிக்கவேண்டியது அவர்கள் கடனாகும்.

...வது :—

௳. ஆ சஞ்சிகைகளை வ...

பெற்றோம். ...... ...கோர்ட்டுகளின் குறிப்புகளும் இந்தியாவிலுள்ள ஹைகோர்ட்டு கோர்ட்டுகளின் குறிப்புகளும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்திருக்கின்றன. இந்த பத்திரிகையானது தமிழ் தெரிந்த மக்களுக்காகவென்று ஏற்பட்டிருக்கிறது. ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்ப்பதான மிகவும் கஷ்டமான செய்கையை நடத்துவதில், தெளிவானதும் சுலபத்தில் புரியும்படியானதுமான நடையில் விளங்கச்செய்யும் இந்த பத்திரிகை மிகவும் நன்றாக ஆதரிக்கப்படவேண்டும்.

ஆனந்த விகடன் எழுதுவதாவது :— 19

மேற்படி பத்திரிகையின் முதல் சஞ்சிகைகள் நமது பார்வைக்கு அனுப்பப்பட்டன. இது ஆங்கிலமறியாத தமிழ் மக்களுக்கு சட்ட அம்சங்களை நன்றாய் போதிக்கக்கூடிய ஒரு அரிய மாதாந்திர பத்திரிகையாகும். சென்னை ஸ்தல ஸ்தாபன சுய ஆட்சி, ஓட் உரிமை, கோர்ட்டுகளில் வியவஹாரம் நடத்தும்வகை, கோவாபரேஷன் என்னும் ஐக்கிய நாணய சங்கக் கிளர்ச்சி, கவர்ன்மெண்டின் அமைப்பு, அதிகார எல்லை, முதலிய அரியபெரிய விஷயங்களைக் குறித்து உயர்ந்த வியாசங்களும் வெளி வருகின்றன. இது ஜமீன்தார்கள், உண்டிக்கடை வியாபாரிகள், மிட்டாதார்கள், சுரோத்திரியதார்கள், லோகல் போர்டு மெம்பர்கள், ஹானரரி மாஜிஸ்டிரேட்டுகள், பஞ்சாயத்து கோர்ட்டு மெம்பர்கள், வக்கீல் குமாஸ்தாக்கள், பெடிஷன் எழுதுவோர், இன்னும் மற்ற வியவகாரஸ்தர்களுக்கும் மிகவும் உபயோகமானது.

மதுரை "செந்தமிழ்" எழுதுவதாவது :—

அகில இந்தியா லா ஜர்னல்:—இஃதொரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை. அரசியற் சட்டங்களின் அமைப்பையும் அதுபற்றி நியாயாதிபதிகள் அவ்வப்பொழுது செய்துள்ள தீர்ப்புக்களையும் ஆங்கிலங்கல்லாதாரும் அறிந்துகொள்ளுமாறு இது வெளியிடப்படுகின்றது. இது மிகவும் அரியதொரு முயற்சியேயாம். இதன்பயனும் அளவிடற்பாலதன்று. தகுதிவாய்ந்த வழக்கறிஞர்களே இதனை மேற்கொண்டிருத்தலால் இனிது சிறந்துவருமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன்

...ரச
...வும் 64-
...விபரம் விளங்கு...

ஸ்ரீரங்கம் “ராஜாங்கை” [illegible]

இது ஒரு சட்ட சம்பந்தமான மாதப்பத்திரிகை. அத்தொழி
லில் விசேஷப்பயிற்சி பெற்ற நிபுணர்களால் அநுபவச் சார்பில் நடத்
தப்பெறுவது. எவ்வளவு சுலபமாய் விஷயங்களை விவரிக்க இயலுமோ
அவ்வளவுக்கும் முயன்று சட்ட சம்பந்தமான ஞானம் பொது ஜனங்
களுக்கு உண்டாகும்படி நிரம்பவும் பிரயாசை எடுத்துக்கொண்டு நடத்
தப்படுகின்றது. தமிழ்நாட்டில் இத்தகைய பத்திரிகை இன்னொன்
றில்லை. தோன்றிய சிலவும் மறைந்தன. இப்பத்திரிகையைத் தமிழ்
அபிமானிகள் ஆதரித்து விசேஷித்த நன்மையை அடைவார்க
ளென்று நம்புகிறோம். பன்னிரு சஞ்சிகைகளையும் சேர்த்துப் பயின்று
செய்தபிறகு தான் இதன் அருமை தெரியும். இப்பத்திரிகையின் அபி
விருத்தியை நாம் மனப்பூர்வமாய் விரும்புகிறோம்.

---

## சென்னை லோகல் போர்ட்ஸ் மான்யுவல்.

### சென்னை ஸ்தல ஸ்தாபன சுய ஆட்சி.

லோகல் போர்ட்ஸ் ஆக்ட் இப்பொழுது திருத்தப் பிரேரேபணை
யில் இருந்து வருகிறது. முக்கியமான அம்சங்களில் அது திருத்தப்
படப் போவதால் அதை நாங்கள், குறிப்பு, அர்த்த விளக்கம் முதலி
யவைகளுடன் தீர்மானமான கேஸுகளின் சாராம்சங்களையும் தெரி
வித்து முன்னிலும் மிகவும் விரிவாக சுமார் 1000 பக்கங்களுடன் தமி
ழில் பதிப்பிக்கப்போகிறோம். ஒவ்வொரு லோகல்போர்டு அதிகாரி,
அங்கத்தினர் இவர்களுக்கு முக்கியமானது. பிரசுரமாகா முன் விலை
ரூ. 6-0-0. ஆர்டர்கள் ரிஜிஸ்தர் செய்யப்படும். பிரசுரமானபிறகு விலை
உயர்த்தப்படும்.

C. A. சிவபூஷணம் அண்டு கோ.

திருவள்ளூர்,

M. S. M. Ry

[illegible]

முக்கியங்கள் ! —— முக்கியங்கள் !

இந்தியா கவர்ன்மெண்ட்டு 1922-ம் வருஷத்து சட்டமாகிய இன்கம்டாக்ஸ் ஆக்டு முகவுரையுடனும், ஒவ்வொரு சாராம்சத்துடனும் அதன் கீழ் நடந்திருக்கும் முக்கிய தீர்மானங்களுடனும், இந்தியா கவர்ன்மென்ட்டு சென்னை கவர்ன்மென்ட்டு இவர்கள் கெஜட்டுகளை பெசட்டு செய்திருக்கும் ஆர்டர்கள் விதிகள் இவைகளுடனும், பதிப்பிக்கப்பட்டு 1939வருஷம் வரையிலும் உள்ள திருத்தங்கள் உள்பட வெளியாகும். உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் சுமார் 450 பக்கங்களுக்கு குறையாமல் அட்டவணை முதலிய சகல உதவிகளுடன் யாவரும் சுலபமாய் தாங்கள் வேண்டிய பாகங்களைக் கண்டு அறிந்துகொள்ளும்படி தக்க ஏற்பாடுகளுடன் பதிப்பிக்கப்பட்டு வருகிறது. எமது பிரதியில், கேவலம் ஆக்டையும் விதிகளையும் மாத்திரம் இல்லாமல் அவைகளின் விபராகமும் எளியநடையில் நன்கு விளக்கப்பட்டிருக்கும்.

ஜமீன்தார்களுக்கும் கணக்க வியாபாரிகள், உண்டிக்கடைக்காரர்கள், மிராசுதாரர்கள், வக்கீல் குமாஸ்தாக்கள் இவர்களுக்கு வெகு முக்கியமானது.

சுவல்ப பிரதிகளே அச்சில் இருப்பதால் உடனே ரிஜிஸ்தர் செய்து கொள்ளும்படி எச்சரிக்கை செய்கிறோம். ஜனவரி மீ கடைசி தேதிக்குள் ஆர்டர்களே ரிஜிஸ்தர் செய்யப்படும்.

எச்சரிக்கை :—எமது ஆபீஸில் 500 காபிகள்தான் வெளியாகும். ஏற்கெனவே 400 ஆர்டர்கள் ரிஜிஸ்தராயிருக்கின்றன. ஆர்டர்களுக்கு ரிஜிஸ்தர் செய்திருப்பதை தெரிவித்திருக்கிறோம். ஆர்டர்கள் தேதிபிரகாரம் புஸ்தகங்கள் வெளியானபிறகு அனுப்பப்படும். 500 ஆர்டர்களுக்கு மேல்வரும் ஆர்டர்களை கவனிக்க முடியாது அதைப்பற்றி சற்று முன்பே தெரிவித்திருக்கிறோம்.

பிரசுரத்திற்கு முன் விலை ரூ. 3—0—0. பிரசுரமான பிறகு விலையை உயர்த்தப்படும்.